38

ஜெய் ஹிந்த்

புவனேஸ்வரி துணை,

# நம் நாட்டின் செல்வம்

அல்லது

# கைராட்டின மகிமை

## இனிய தமிழ் நாவல்

7 OCT 194




1946.

அணா 6.

istered Copy Right.

, Q.H.M.S. 360. 5000 Copies 26-9-46

புவனேஸ்வரிதுணை.

# நம் நாட்டின் செல்வம்

அல்லது

# கைராட்டின மகிமை.

இனிய தமிழ் நாவல்



7.OCT 19

இஃது

காயார். V. சிங்காரவேல் நாயகர்

அவர்களால் இயற்றியதை,

N. ராமன்நாயர் அவர்களால்

சென்னை ஸ்ரீ சுப்பிரமணியவிலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy Right.

இதன் விலை] 1946. [அணா 6

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 104695

ஜேய்ஹிந்த்.

# முன்னுரை.

நெடிய கடல்சூழ்ந்த ஏஷியாக்கண்டமாகிய நம் தாய்நாடாகிய இந்தியாவின் பாரத புதல்வருகிய சகோதரர்களே இச்சிறியேன் நம் நாட்டின் செல்வம் (அல்லது) கைராட்டின மகிமை என்னும் இச்சிறிய தமிழ் நாவலை அடியேன் சிற்றறிவுக் கெட்டியவரையில் எழுதத் துணிந்தமையால் இதில் எவ்வித குற்றமாயினும் தங்களின் குற்றமென பாவித்து அடியேனை ஆதரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

தங்கள் அபிமானம்பெற விரும்பும்

தொண்டன்,

**காயார். வே. சிங்காரவேல் நாயகர்.**

புவனேஸ்வரி துணை.

# நம் நாட்டின் செல்வம்

அல்லது

# கைராட்டின மகிமை.

## அத்தியாயம் 1,

ஒரு வாலிபன் மனவருத்தமுடன் ஓர் அழகிய நந்தவனத்தில் அமர்ந்து யோசனையிலாழ்ந்து சிறிதுநேரங் கழித்து மனதைதேற்றி யெழுந்து தன் இல்லம்வந்து சேர்ந்தான். அவனின் தந்தை நோய்வாய்ப்பட்டு மரணவஸ்தையால் இருந்தார் இதனைக்கண்ட வாலிபன் தனதுமூத்தோனாகிய கோதண்டனும அவனைக்கண்டு அண்ணா நமது தகப்பனர் இனி பிழைப்பாரென்று கனவிலும் நினையாதே. ஆகலால் அவரின் கைபட அவர் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை இந்நாட்டில் உள்ள பாமர ஏழைகளாகிய ஹரிஜனங்களுக்கு அவரின் இஷ்டம்போல் தருமம் செய்யட்டும் அண்ணா தாங்களும் இந்நாட்டில் அவதியுறும் ஹரிஜனங்களுக்கு நன்மையைசெய்து நல்ல பெயரெடுத்துக்கொள்ளுங்கள் என மிகவும் வணக்கமுடன் கூறி நமஸ்கரித்தான்.

கோதண்டன்:—சட் மடையா இன்னம் நம்மைவிட எத்தனையோ கோடி கணக்காக பொருளை வைத்துக்கொண்டு வட்டிக்கு கொடுத்து இன்னம் அதிகமாக பொருளை சேகரிக்கிறார்கள். நமக்கிருப்பது மொத்த தொகை $7\frac{1}{2}$ கோடிதான். இதில் நாமென்ன தருமஞ்செய்வது என கோபக்குறிப்புடன் மொழிந்தான். இக்கொடிய வார்த்தையைக்கேட்ட,

**வாலிபன்:**—அண்ணா அடியேன் மீது சீற்றங்கொள்ளாதீர். தங்களுக்கு தெரியாத காரியம் ஒன்றுமில்லை. ஆனாலும் அடியேன் சில விஷயங்களைகூற விரும்புகிறேன். அங்கீகரிக்குமாறு தங்களை மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன் யாதெனில் இவ்வுலகில் அநேகர் ஆங்கிலேயம் வாசித்து பி.ஏ. பரிக்ஷைஷயில் தேறி வேலையில்லாது திண்டாட்டமாக யாவரும் பார்ப்பதற்கு கனவான்களும், தனவான்களும் போல் இருப்பார்களே யொழிய காரியங்களில் யோசிக்குமளவில் அரைகாசுக்கும் வழியில்லாமல் தவிக்கிறார்கள். ஆதலால் நமக்கு இருக்கும் 7½-கோடி ரூபாயில் நான்குகோடி ரூபாய் மூலதனமாகவைத்து ஒரு கம்பெனியைவைத்து நம்மிலும் ஏழைமக்களாய் இருக்கும் ஹரிஜனங்களுக்கு தொழில்புரிய வசதி அளித்து அவர்களுக்கு சால்வயறு சாதம் கொடுத்தாலும் நமக்கு ஆண்டவன் துணையும் பாமர ஏழைமக்களின் ஆசீர்வாதமும் கிடைக்கும். அதனால் நமக்கு நன்மையளிக்கும் அடியேனாகிய சிறுவன் கூறிய மொழிகளை கவனிக்குமாறு தங்களின் இரு பாதங்களையும் நமஸ்கரிக்கிறேன்.

**கோதண்டன்:**—அட பயித்தியமே ஊர் ஜனங்கள் எப்படி இருந்தால் நமக்கென்ன நாம் நமது பொருளின் வருமானத்தைக்கொண்டு நம் வரையில் சுகபோகங்களை அனுபவித்துக்கொள்ளாமல் மற்றையோர்களுக்காக ஏன் சிரமம் யெடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வித யோசனைகளை விட்டுவிடு. அதனால் வரும் லாபமும் வேண்டியதில்லை என உரத்த குரலில் மொழிந்தான். இக்கடூர குரலை கேட்ட தந்தையார் தனது குமாரர்களை அழைத்து அப்பா யென்ன விஷயம் உரத்தகுரலில் சம்பாஷிப்பது யென வினவினர்.

வாலிபன்:—தந்தையே, விசேஷம் யாதெனில் தாங்கள் அரும் பாடுபட்டு சம்பாதித்த பொருளை நல்வழியில் செலவு செய்யவும் தங்கள் ஆத்மா இருக்கும்போதே தங்கள் கையால் தருமம் செய்யவேணுமென்ற கோரிக்கையை எனது அண்ணனுக்கு மொழிந்தேன். அண்ணன் என்மீது சீற்ற கொண்டார். இவ்வளவுதான் மற்றைய விசேஷம் யாது மில்லை

தந்தை:—ஹா! எனது அருமைப் புதல்வர்களே! நான் உங்களிருவருக்கும் கூறக்கூடிய விஷயம் யாதெனில் நீங்களிருவரும் ஒற்றுமையென்னும் பொருளை கடைப்பிடித்து, தந்தைசொல்மிக்க மந்திரமில்லை யென்னும் முதுரையை மின்பற்றி,

திருப்பதி மிதியாப்பாதஞ் சிவனடி வணங்காச்சென்னி
இறப்பவர்க் கீயாக்கைக ளினியசொற் கேளாக்காது
புரப்பவர் தங்கள்கண்ணீர் பொழிதரச் சாகாதேகம்
இருப்பினும் பயனென்காட்டி லெரிப்பினு மில்லைதானே.

என்பதைப்போல் தருமம்செய்வது போலவும் நம்மொருவருக்கு நஷ்டம் வராமலும், ஒரு தொழில் கம்பெனியை வைத்து நடத்துவது என் மனதுக்கு சந்தோஷத்தை யளிக்கும். ஆதலால் நீங்களிருவரும் ஒற்றுமையாய் நடத்துங்கள் என மொழிந்துகொண்டிருக்கையில் அவரின் ஆத்மா பரகதியடைந்தது. மைந்தர் இருவரும் அனலில்பட்ட புழுவைப் போல் துடிதுடித்து ஆ! தந்தையே எங்களுக்கு கூறவேண்டிய விஷயம் இவ்வளவுதானோவென துக்கித்தார்கள். மண்மேல் புரண்டழுதார்கள். அங்கிருந்த உறவினர்களும், நண்பர்களும் இருவருக்கும் தேறுதல்கூறி கரும விதிப்படி சவச் சடங்குகளைசெய்து முடித்தனர். சுற்றத்தார்கள் இருவரையும் அழைத்து அப்பா உமது தந்தை தங்களிருவர்க்கும் யாது மொழிந்தனரோ அவ்வுத்தரவைப் போலவே சுகமாயிருங்கள் என மொழிந்தனர்.

கோதண்டன்:—ஹோ எனது தந்தை மொழிந்தது தவறு அவ்வார்த்தைக்கு யான் சம்மதியேன் அவரிம் வார்த்தைக்கு எனது சகோதரன் இஷ்டப்பட்டால் தந்தையர் சொல்போலவே நடந்து கெட்டுப்போகட்டும். நான் அவ்விதவாய் ஊரார்களுக்காக காசை கரியாக்குவதற்கு எனக்கு இஷ்டமில்லை எனது சகோதரன் மொழிந்த வார்த்தை ஹரிஜனங்களுக்காக உதவியளிப்பதாக இருக்கிறது அவர்களுக்கு உதவியளித்தால் நம்மை மதிப்பார்களா?நமக்கடங்கி தொழில் நடத்துவார்களா?இதெல்லாம் வீணாகிய காரியம் என கடுங்கோபாவேசமாகக் கூறினான்.

வாலிடன்:—அண்ணா கோபப்வேண்டாம் தங்களுக்கு மனமில்லாவிடில், அத்தொழில் ஆரம்பிக்கவேண்டாம். இதற்காக தாங்கள் என் மனவருத்தப்படவேண்டும்.

---

## அத்தியாயம் 2.

# கற்பகஜோதி தொழிற்சாலை.

முனுசாமி:—சகோதரர்களே! எங்கு ஓரேகூட்டமாக செல்கின்றீர்கள்? என்னவிசேடம். கூறுங்களேன் யானும் வருகின்றேன்.

கூட்டத்தலைவன்:—சகோதரா! நகரின் விஷயம் ஒன்றும் தெரியவில்லையோ?அடபயித்தியக்காரா. ஸ்ரீயான் கோபால்சாமி நாயுடு குமாரன் ஜனார்த்தனம் என்பவர் பெரிய கட்டிடங்களை கட்டி கைராட்டினங்கள் சுமார் 5 ஆயிரமிருக்குமாம் தைத்தரிகள் ஆயிரத்துக்குமேல் இருக்குமாம் நம்போன்ற ஏழை ஜனங்கள வேலை இல்லாமல் பசிப்பிணியால் வாடாமல் ஏதோ தொழில் புரிந்து ஜீவிப்பதற்காக அப்புண்ணியவான் கம்பெனி திறக்கப்போகிறார் இன்று

நாம் சென்று நம் பெயரையெல்லாம் கொடுத்து பதிய வைத்துக்கொண்டால் நாளைமுதல் நாம் தொழில் புரிவதற்கு ஹேதுவாகும் அதற்காகத்தான் செல்கின்றோம்.

முனுசாமி:—ஐயா நானும் வருகிறேன் 1½-வருட காலமாய் தொழில் கிடைக்காமல் என் மனைவி மக்களுடன் பசிப் பிணியால் வதைகிறோம். அப்புண்ணிய சொரூபி ஏதோ தொழில் கொடுத்தால் என் மனைவி மக்களை காப்பாற்று வேன் எனக்காக தாங்களும் சிறிது உதவியளிக்க வேண்டும் என்றான்.

கூட்டத்தலைவன்:—அப்பா இதற்குமுந்தி ஏதாமொருதொழில் வேணுமென்றால் லஞ்சம் கொடுத்து போகவேண்டும், லஞ்சம் கொடுத்தாலும் தொழில்கிடைத்தால் கிடைக்கும். இல்லாவிடில் கைப்பொருளையும் பறிகொடுத்து பாதவிக்கவேண்டியதுதான். ஆனால் தற்சமயம் காங்கிரஸ் ஆட்சியில் லஞ்சம் வாங்கினது ருஜூவானால் அட்சணமே அவர்களை காங்கிரஸிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். இப்பொழுது புதிதாய் திறக்கப்போகும் கற்பகஜோதி கதர் தொழிற்சாலையில் இந்த தொந்தரவெல்லாம் கிடையாது. ஆகையால் சீக்கிரம்வாவென அழைத்தேகினான்.

பெரியவர்:—ஓகோ இக்காலத்திலா என்னென்னமோ இழவு வேஷ்டிகள், புடவைகள், சொக்காய்துணிகள், ரவிக்கை துணிகள் என்கிறாங்கோ இதென்ன பாழாபோனகாலமோ என் மகனிருக்கானே சின்னகொழந்தை நான் கஷ்டப்பட்டு சப்பாதித்த பொருளெல்லாம் கொண்டு போய் அவன் பெண்டாட்டிக்கு ஒரு புடவை வாங்கிட்டு வந்தான் விலை என்னென்றுகேட்டா. அம்பது ரூபாய் என்கிறான் இந்தகாலத்து அநாகரீகத்தை சொல்லவேணுமானால் உங்களைப்போல மைனர்களுக்கெல்லாம் கோபம்

வரும்போலிருக்கிறது. இதற்காகத்தான் சிறிது அஞ்சு கிறேன் என்ன எனவே ஒழிந்துபோகட்டும்.

கூட்டத்தலைவன்:—தாத்தா முந்தியகாலத்தில் கோபம் வருவது வாஸ்தவந்தான் தற்சமயம் தாங்கள்வுரைத்த காந்தி தாத்தா சகல ஜனங்களையும் சாத்வீதமாகும்படி சமரசமென்கிறபானத்தால் கட்டியிருக்கிறார் ஆதலால் நாமெல்லோரும் சகோதரர்தான் தாங்கள் யாதுகூறினாலும் கோபம் என்பது யாவருக்கும் வராது

பெரியவர்:—ஆமாம் இந்தகாலத்து துணிகளால் பெரியமோசம், மைனர்கள் காசை சம்பாதிக்க முடியாதபோதிலும் என்னைப்போல் கிழவர்கள் நெற்றியின்வியர்வை நிலத்தில் விழபாடுபட்டு சேகரித்த பொருளை பலவித துறைகளில் வீண் சிலவுசெய்து கடைசியில் பிச்சைவாங்கியுண்பதற்கும் வழியில்லாது தவிக்கின்றார்கள்.

கூட்டத்தலைவன்:—தாத்தா இங்கிகழ்காலத்தில் அனுவசியமாக சிலவுசெய்வதற்கு வழியில்லை.

பெரியவர்:—அப்பா எவ்வழியென்று எனக்கு தெரிந்தவரையில் கூறுகிறேன் சற்று கவனிக்கவேண்டும், சில மைனர்கள், ராஜாங்க தமாஷ் விளையாட்டு யென்னும் குதிரைப் பந்தயங்களில் சார்யான் இன்றைக்கு ஓர் டிருப்பிளிங் ஆடினேன் 6-9-12 இரண்டு வின் ஒன்று பிளேஸ் ஆயினது அந்த ஒன்றும் வின் வந்திருந்தால் என்னுங்கோ சார், குறைந்தது ஆயிரத்தைந்நூறு ரூபாய் வந்திருக்கும் இதுதான் இப்படியாயிற்று என்று பார்த்தால் ஒரு டபூளிங் ஆடினேன், ஒன்று பிளேஸ், ஒன்று நோவர்ஆயிற்று 7 பர்லாங் கொச்சின் கப்பில் 9-4 வைத்து (S Black) எஸ், பிளாக் வின்செய்தான். அதேசெட்டில் 9 வைத்து பாரத்தில் இருந்தது அவுட் ஆய்விட்டது இது மகா மோசம்சார் எனக் கூறுகிறார்கள், அப்படி மோசம் என்

பதை தெரிந்தும் அடுத்தரேஸில் பந்தயம்கட்டி மோசம் போகும் பாதகரை என்ன புகலலாம். இதன்றிசார் வெப்யல் கொடூரமாக இருக்கிறது. பீர்சாப்பிட்டால் குளிர்ச்சியைதரும் என்கிறார்கள் அதல்லாமல் நம் நாட்டின் உற்பத்தியான எலுமிச்சம்பழமும், பனங் கற்கண்டும், கலந்து தண்ணீரில் இட்டு சாப்பிட்டால் குளிர்ச்சியை தராதா. இதுதான் மேனாட்டு நாகரீகமா. இவ்விதமாக குடிவகையிலும் கஞ்சா அபின் என்று சொல்லக்கூடிய போதைதரும் வஸ்துவை இல்லம்துறந்த சிங்கங்கள், தாம் யோகம்செய்ய துவக்கினால் தன்னிலைகண்டு தவத்தி விருப்பதே சிங்கா என்ற ஆன்றோர் மூதுரைப்படி தன்னிலையென்றும் அறிவை கடல் அலைபோல் பலவித துறைகளில் செலுத்தாமல் ஓர் வழியில் திருப்ப கஞ்சாவை பிரயோகிப்பார்கள் தற்காலத்திலோ மூலை முடுக்குகளிலெல்லாம் ஜட்காவண்டிக்காரர்களும், ரிக்ஷாவண்டிக்காரர்களும், இன்னும் பலவிதமான மைனர்களும், பிரயோகப்படுத்துகிறார்கள். ஆதலால் கஞ்சாவின் மதிப்பு ஒழிந்தது.

கூட்டத்தலைவன்:—தாங்கள் கூறுவனவெல்லாம் உண்மையே ஆனால் இப்பொழுது மதுபானம் அருந்துவதைவிட்டு நாளுக்குநாள் அறிவை மேன்மையானவழியில் திருப்புகிறார்கள் ஆதலால் அக்கொடிய மது அரக்கனை நம்நாட்டைவிட்டு துரத்த கங்கணம் கட்டிக்கொண்டார்கள் கூடிய சீக்கிரம் ஒழிந்துவிடும் நமக்கெல்லாம் ஆனந்தம்தான்.

பெரியவர்:—இவ்வளவுதானா இந்த இழவுக ளிப்படியிருக்க வேசியர்களின் தொந்தரவை சகிக்க முடியாமல் இருக்கிறது. அப்பா ஒவ்வொரு வாலிபர்கள் வேசியரிடத்தில் அகப்பட்டு தத்தளிப்பதை யென்னென்றுகூறலாம். வேசியர்களோ மகா சமர்த்தர்கள். அதனிலும் டாபர்களோ

பெரிய கனவான்களைப்போல இருக்கிறார்கள் அவர்களின் ஆர்பாட்டம் சொல்லமுடியாது. அவர்கள்செய்யும் பசப்புவார்த்தைகளில் மின்மினிப் பூச்சியைப்போல் மாண்டுமடிகிறார்கள்.

ஈயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் சொரிந்தெழுந்து
பாழும்புடவை யொன்றில்லாதபோது—பகலிரவா
ஈயும் எறும்பும் புகுகின்ற யோனிக்கிரவுபகன்
மாயும் மனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே.

என நமது பட்டினத்தடிகள் பாடியுள்ளார் அப்பாழும் வேசியர்களின் அன்பால் பலபேர் அரிய அம்மிமிதித்து மாங்கல்யம் சூட்டிய மங்கையரையும் தனது மக்களையும்விட்டு தன் வாழ்நாட்களெல்லாம் அப்பாழும் வேசியரிடத்தில் சுகபோகங்களை யனுபவித்து கைப்பொருளெல்லாம் சிலவழிந்தபின் அவ்வேசியர்கள் மற்றொரு கணவனை கைப்பற்றி இதுகாலமிருந்தவனை வெளியே தள்ளிவிடுகிறார்கள் அச்சமயத்தில் தான் வைத்திருந்த பொருளையும் தன் மனைவி மக்களையும் நினைத்து தேவடியாள் வீட்டு நாயாக மாறிவிடுகிறார்கள். அக்கொடிய விபசாரவிடுதிகளெல்லாம் எந்தகாலத்தில் ஒழியுமோ

கூட்டத்தலைவன்:—தாத்தா தற்காலநிலைமை அப்படி பெருமோசமானதாக இல்லை சாரதாசட்டம் அமுலுக்கு வந்தபின் அவ்வித செய்கைகள் முக்காற்பங்கு ஒழிந்தது அக்கொடியநோயும் நாளுக்குநாள் மறைவது திண்ணம் தாத்தா சென்றுவருகிறேன் விடையளியுங்கள்.

பெரியவர்:—அப்பா நல்லது சென்றுவருவாயென விடை கொடுத்தார்.

## அத்தியாயம் 3.

# சென்னை ஹரிஜன பால்யர் பாடசாலை.

பாமர ஏழைகளுக்கென பாடசாலை ஒன்று திறப்புவிழா நடந்தது நகரில் பெரியோர்கள் யாவரும் வந்து வெகு ஆநந்தமுடன் திறப்புவிழா நடத்தினர்கள் அக்கூட்டத்தின் தலைவர் எழுந்து நின்று மிகவும் வணக்கமாய் இச்சபையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, சிறியோர்களே, சகோதரர்களே, சகோதரிகளே, சென்னை ஹரிஜன பால்யர் பாடசாலைக்காக திரவியம்யாவும் தந்து திரேக சிரமும் பாராதது ஷடி பாடசாலையை ஸ்தாபனஞ்செய்த அண்ணர்க்கு என் நன்றியரிதலை தெரியப்படுத்துகிறேன் அதன்றி அவர் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் தேசசேவையில் ஈடுபட்டு தேசத்திற்காக தன் உயிரையும் அர்ப்பணஞ்செய்யவும் தயாருய் இருக்கிருர். ஆதலால் அவரின் ஆயுள் நீண்டிருக்குமாறு கடவுளை ஏக மனதாய் பிருர்த்திப்போமாக. ஐந்துநிமிஷம் கடவுள் பிருர்த்தனை நடந்தது சிறிதுநேரங்கழித்தது கூட்டம் இனிது கலைந்தது.

பேபி கமலம்:—அக்கா என்ன இன்று நீங்களெல்லோரும் வெகு ஆனந்தமுடன் புதிய உடைகளை அணிந்து கைதனில் புஸ்தகம் பலகை யேந்தி எங்கு செல்கிறீர்கள் யானும் வரலாமா அக்கா.

சரோஜினி—தங்கா நாமெல்லோரும் ஏழைமக்களின் புத்திரியாய் ஜெனித்தோம் நம் தலைவிதி இப்படியிருக்கிறது, ஆனல் நமது தந்தையர்களுக்கு தொழில் கிடைக்காமல் கூழ்கஞ்சிக்கும் வகையில்லாது தவித்தோம் நமக்கு மனிதப்பிறவியென்ற மதிப்பும் கிடையாமல் கொடிய மிருக

ஐந்துவாக பாவித்து மேல்ஜாதியென்று சொல்லிக் கொண்டு நம்மை பாதாளத்தில் தலை நிமிராமல் அழுத் திக்கொண்டிருந்தார்கள்.

பேபி கமலம்:—ஆம் அக்கா! வாஸ்தவந்தான் இப்பொழுது நமக்கு என்ன வந்துவிட்டது.

சரோஜினி:—தங்கா! நமது தந்தையர்களுக்கு தொழில் புரிவ தற்கு வழியில்லாது தவித்தார்கள். இப்பொழுது கதர் துணி நெய்வதற்காக பெரிய கம்பெனிகள்வைத்து சுமார் நான்காயிரம் பேர்களுக்குமேல் தொழில் செய்கிறார்கள். அதன்றியும் நம்போன்ற ஏழைமக்களுக்கு இலவச பாட சாலைகள் வைத்து கல்விகள் போதிக்கிறார்கள். அதற்கா கத்தான் செல்கிறேன். நீயும் வாலாம் சீக்கிரம்வா.

பேபி கமலம்:—அக்கா! கதர்துணி யென்ன அவ்வளவு நன்றா யில்லையே அந்த கம்பெனி வைத்தார்கள் என்றாயே வியா பாரம் நன்றாய் நடந்தாலல்லவோ கம்பெனி ஜோராய் நடக்கும். சீமைதுணிகள் என்ன லேசா, நைசா, அழகா இருக்கிறது அதல்லவோ நம் நாட்டில் வியாபாரம் அதிக மாகிறது.

சரோஜினி:—தங்கா! பாழும் அன்னியர் ஆடைகள் அழகா லேசா, நைசா இருக்கிறதென்றுதான் நம்நாட்டினர் அன் னியர்களின் மாயவலையிற் சிக்கி நாளுக்குநாள் ஏழைமக் களாகி அன்னியர்களுக்கு அடிமைபோல் பரதவிக் கின்றோம்.

பேபி கமலம்:—அக்கா! யாது மொழிந்தனை அன்னியர்கள் ஆடையால் அவ்வளவு மோசத்தை நம் நாட்டிற்கு செய் ததா. முந்தி எங்கபாட்டி சிறிய கதை ஒன்று புகல்வார் கள் நமதுநாட்டிலிருந்து வெளியூர்களுக்கெல்லாம் ஜவுளி சரக்கு சென்றதாகவும் அதனால் ராணியம்மையார் இந்தி

யாவுக்கோர் சன்மானம் கொடுத்ததாகவும் கூறினார்களே இப்பொழுது நம் நாட்டினோர் அவர்களின் ஜவுளிகளை எதிர்பார்த்தா இருப்பார்கள். அக்காலத்திலே இருந்த சுருசுருப்பு தற்போது இல்லையோ இதுயென்ன விந்தையாயிருக்கிறதே.

சரோஜினி:—தங்கா! விந்தையல்ல நம் நாட்டில் ஒற்றுமை என்னும் பொருளை நழுக விட்டுவிட்டார்கள் ஆதலால் அன்னியர்கள் சூழ்ச்சிக்குள் சிக்கி மோசம்போனார்கள். சுமார் முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் தாதாபாய், நௌரோஜி, வந்தேமாதரமென்றும் இது அன்னியர்கள் நாடல்ல நம்நாடுயென ஆரம்பித்தார். அக்காலத்தில் அவருடன் சேர்ந்தவர் சிலரே. அவர்க்குப்பின் லோகமான்ய பால கங்காதர திலகர். நம்நாடு நாம்தான் சுயராஜ்யம் ஆளத்தகுந்தவர்கள் இவ்விந்தியாவில் உற்பத்தியான மக்களுக்கெல்லாம் சுதந்திரம் உண்டுயென நம் நாட்டின் மக்களுக்கு வற்புறுத்து கூறினர். அவர்க்குப்பின் கண்ணபிரான் கலியுக அவதாரமாய் கரம்சந்திர மோஹனதாஸ் என்னும் காந்தி மஹாத்மா தோன்றி நம்நாடு நலமடைய காங்கிரஸ் என்று ஆரம்பித்து சைருட்டினத்தை சுழலச்செய்தார் அன்னிய அரசாங்கத்தார் நம் நாட்டு மகாத்மாவை அரஸ்டுசெய்து சிறையிலடைத்தார்கள். அதனால் ஊரெங்கும் மிகுந்த பரபரப்பை யுண்டுபண்ணியது. சிறியதுளி பெரிய வெள்ளம் என்பதைப்போல் பரவியது.

பேபி கமலம்:—ஆம் அக்கா நமது காருண்ய காந்தி தாத்தா சிறையில் சென்றதால் காங்கிரஸ் அழிந்து விட்டதா அதனால் நம்நாட்டு மக்களுக்கு காங்கிரஸின் அபிமானம் விட்டுவிட்டதா நம் நாட்டின் கைருட்டினம் சுழன்றால் அன்னிய தேசத்தவர்களுக்கு அதனால் அவர்களின் குடி மூழ்கிவிட்டதா.

சரோஜினி:—தங்கைபேபி! காந்திதாத்தா சிறையில் சென்றதால் காங்கிரஸ் ஆல்போல்தழைத்து அருகுபோல் வேரூன்றி மகாபலமடைந்து நிற்கிறது அதனிலும் நம் நாட்டிலுள்ளோர் நூற்றுக்கு இரண்டுபேர் கதர் கட்டுகிறார்களோ இல்லையோ இதற்குள் லங்காஸயர் மில்களெல்லாம் மூடப்பட்டு விட்டன. அங்கிருப்பவர்களுக்கு தொழில் இல்லையென பெருத்த கோஷ்டங்கள் உண்டாயின எல்லோரும் காந்திதாத்தா கூறியபடியே கதர் அணிந்தால் அவர்களின்கதி யாதுவாகும் நாம் ஏன் அவர்களை சுயராஜ்யம் கொடுங்கள்யென கெஞ்சவேண்டும் அவர்களே நம்மை அழைத்து உங்கள் தாய்நாட்டை நீங்களே அனுபவித்துக்கொள்ளுங்கள் எங்கள் தேசத்தோர் பிழைக்க எங்கள் நாட்டு சாமான்களை வாங்குங்கள்யென மன்றாடி கேட்டுக்கொள்வார்கள். இந்தகாலத்தில் உள்ளவர்கள் ஒற்றுமையில்லாமையே முக்கியகாரணம் அதனிலும் நம் தாய்மார்கள் அன்னியர்களின் ஆடையை உடுத்துவதால் பளபளவென பார்வை கொடுப்பதால் வயது முதிர்ந்தவர்களையும் சில வாலிபர்கள் உற்று கவனிக்க வேண்டிய நிலை வந்துவிடுகிறது. ஆதலாம் நம் பாரதத் தாய் நாட்டில் கற்புக்கு பங்கம் நேரிடுகின்றது.

பேபி கமலா:—ஆம் அக்கா நாம் நமது தாய் தந்தையர்க்கு அன்னியர் ஆடையால் நாம் படும் கஷ்ட்ட நஷ்டங்களை உரைத்து அன்னியர் ஆடையை அறவே வொழித்து நம் நாட்டில் நம்மவர்களால் உற்பத்திசெய்யும் கதரைத்தான் வாங்கவேண்டும். கதரைத்தான் அணியவேண்டும்யென கூறினால் நமது தாய் தந்தையர்களும் இவ்வார்த்தைக்கு இசையமாட்டார்களா.

சரோஜினி:—தங்கா நமது தாய் தந்தையர்கள் காந்திதாத்தா கூறியபடி கதரை அணிந்தால் இன்றே நமது நாடு சுய

ருஜ்யமடைந்து சுகபோகமாய் வாழலாம் இதனிலும் பதவிக்கும் பட்டத்துக்கும் ஆசைவைத்து நம் நாட்டை காட்டிகொடுக்கும் தாஸர்கள் சிலர்களால் முட்டுக்கட்டை ஏற்படுகின்றது.

பேபி கமலா:—அக்கா பாரதநாடாகிய தர்மபிதும் இந்நாட்டிலா துரோகிகள் இருக்கிறுர்கள். தாங்கள் மொழிவது பிசகு. நம் இந்தியாவில் உற்பத்தியான எந்த இந்தியனும் நம் நாட்டை காட்டிக்கொடுக்க இசையான். ஆனாலும் கட்சி எதிர்கட்சி ஏற்பட்டால்தான் ஒருகட்சி பலமடைந்து அதனுல் நன்மையுண்டாகும்.

சரோஜினி:—தங்கையே நீமொழிவது வாஸ்தவமே ஆனாலும் சில காலி பேர்வழிகள் நம் இந்தியர்களேயே தாக்க ஆரம்பித்தார்கள். அதனுல்தான் நம் நாட்டு துரோகிகள் இருக்கிறுர்கள்பென யான் புகன்றது சரி நேரமாகின்றது செல்லலாம்.

பேபி கமலா:—அக்கா தங்கள் சித்தப்படியே நட போகலாம்.

---

## அத்தியாயம் 4.

## டின்னர் பார்ட்.

---

ஞானசேகரா எங்கு வெகு அவசரமாக செல்கின்றனே.

ஞானசேகரன்:—மனோகரா இன்று ஓர் ஷோக்கான டின்னர் பார்ட் இருக்கிறது. ஆனல் கூடிய சீக்கிரம் செல்லவேணும் இல்லேயேல் முக்கியமான விஷயம் கிடைக்காது.

மனோகரன்—ஞானசேகரா டின்னர்பாட் நடத்துபவர் பெயர் தெரியவில்லையே.

ஞானசேகரன்—அவர் கோபால்சாமி நாயடு மூத்தகுமாரன் கோதண்டருமை நாயடு.

மனோகரன்:—முக்கியமான விஷயமென்று வுரைத்தனையே அது யாது. அவ்வளவு நன்மையை தரக்கூடியது.

ஞானசேகரன்:—மனோகரா டின்னர்பார்ட் நடந்தால் எது முதன்மையானவஸ்து தெரியாதா அதுதான் ஜானிவாகர், உஸ்கி, பிறுந்தி, ஜின், ரம் வகையறுக்கள் தாமதித்து சென்றால் கிடைக்காது. ஆதலால் கூடியசீக்கிரம் செல்ல வேணும் விடைகொடு நண்பா வருகிறேன்.

மனோகரன்:—ஞானசேகரா உந்தன் நாமதேயத்துக்கு தகுந்தாற்போல் குணங்கள் தென்படவில்லையே வென மன வருத்தமடைகுறேன் யாதெனில் ஞானசேகர னென்பதில்,

ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குறைத்திடில் இடறாக லாகுமே.

என்ற மூதுரைப்படி யான் விஷயங்களை கூறினால் மனம் வருத்தம் நேரிடுமோவென யோசிக்கிறேன்.

ஞானசேகரன்:—மனோகரா தன் வார்த்தைக்கு யாதாகிலும் ஆட்க்ஷேபனை செய்தது இதுவரையிலும் கிடையாது. ஆதலால் தனக்கு தெரிந்தவரையில் உரைசெய்வாயென நம்புகிறேன்.

மனோகரன்:—நண்பா நம் இந்தியாவில் உற்பவித்த ஒவ்வொருவரும் நம் நாட்டின் பழக்க வழக்கங்களை அனுசரிப்பார்களே யொழிய மேனாட்டில் மிருகமுறையை அனுசரிக்கவேமாட்டார்கள் தான் எனக்கு நண்பனாதலால் தன்னை அவ்வித கொடிய துர்ப்பழக்கங்களை அனுசரிக்கவிடுவது எனக்கு அழகல்ல. ஆதலால் மேனாட்டார்கள் குடிவகையில் அதிக மோகம்பிடித்தவர்கள் அவர்கள் இருக்கும் தேசங்களில் சீதோஷ்ண நிலை அதிகரித்திருப்பதால் மது அரக்கனை தன் கைவசமே வைத்துக்கொண்டு இராவிட்

டால் அவர்களுக்கு சாத்தியமன்று அக்கொடிய மது அரக்கனைக்கொண்டு நம்மிந்தியரின் ரத்தத்தை உருஞ்சுகிறார்கள். அம்மாயவலையிற்சிக்கி மோசம்போகாமல் நம் நாட்டின் முன்னோர்கள் பலவித சாஸ்திரங்களிலும் மது வென்னும் வஸ்து பொய், கொலை, களவு, கள், காமம், இவ்வைந்தும் பஞ்சமா பாதகமென்பார்கள். நம்மை இந்தியன் என மொழிந்தால் போதுமான இந்துக்களின் சாஸ்திரங்களை தழுவி நடந்தாலல்லவோ இந்தியனாவான் நண்பா நாம் இந்திய நாட்டிலே உற்பவித்து இந்திய சாஸ்தி முறைப்படி நடக்கவேண்டாமா ஆதலால்கொடிய விஷங்களை கொடுத்து நம் அறிவை கெடுத்து ஆத்மா பரதவிக்கும்படி செய்யும் டின்னர்பார்ட் என்று சொல்வது நமக்கழகல்ல அவ்வித டின்னர்பார்ட் செய்பவர் எவராயிருந்தாலும் சரி அவர் கடைசியில் பிச்சைவாங்கி தின்பதற்கும் வழியில்லாது தவிக்கப்போகிறார். நம் நாட்டில் இவ்வித ஆடம்பரங்கள்செய்து எத்தனையோ குடும்பங்கள் நாசமானதை யாம் நமது கண் முன்பு காண்கிறோம், நண்பா அங்கு செல்லவேண்டாம் மென மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஞானசேகரன்:—மனோகரா தாங்கள் எனக்கு புகன்ற வார்த்தையினின்று தன்யனானேன். இனி அவ்வித துஷ்ட சகவாசம் யான் செய்வதேயில்லை இதுவே சத்தியமாக கூறுகிறேன். நண்பா சென்றுவருகிறேனென நடக்கலுற்றான்.

மனோகரன்:—நண்பா நல்லது சென்றுவாருங்கள். நண்பா எங்கு வெகு துரிதமாக செல்கின்றனை.

ஜெயசீலன்:—தோழா வருக வருக. தாங்கள் என்னமோ மனமகிழ்ச்சியுடன் முகமலர்ந்து காண்பது யாது விசேஷம்

யான் இன்றைக்கு ஓர் ஷோக்கான டின்னர்பார்ட் நடக்கின்றது. அதற்காகத்தான் அதிவிரைவாய் செல்கின்றேன் தாங்களும் அங்குதான் வருகிறீர்களா.

மனோகரன்:—ஜெயசீலா டின்னர்பார்ட்டா எங்கு நடக்கின்றது. அதற்காகத்தான் அதிவிரைவாய் செல்கின்றேன் தாங்களும் அங்குதான் வருகிறீர்களா.

மனோகரன்:—ஜெயசீலா டின்னர்பார்ட்டா எங்கு நடக்கின்றது. அவ்விடம் யெங்கே எனக்கு தெரியாது நமக்கு அழைப்புக்கடிதமும் கிடையாது. ஆகலால் நண்பா எனக்கு உரைசெய்வாயாக.

ஜெயசீலன்:—தங்களுக்கு கோபால்சாமிநாயுடு தெரியுமே அவரின் மூத்தகுமாரன் கோதண்டராம நாயுடு தான் டின்னர் பார்ட் நடத்துகிறார்.

மனோகரன்:—வாஸ்தவம் கோதண்டராம நாயுடு சம்பாதித்த பொருளா.

ஜெயசீலன்:—அவருடைய தகப்பனார் சேகரித்து வைத்த பொருள்தான்.

மனோகரன்:—தாங்கள் ஓர் டின்னர்பார்ட் நடத்தக்கூடாதா.

ஜெயசீலன்:—ஐயோ என்னிடத்தில் அவ்வளவு பொருள் கிடையாது எனது தந்தையும் சேகரித்து பொருள் வைக்கவில்லை.

மனோகரன்:—இருக்கும்வரையில் சிறிய டின்னர்பார்ட் நடத்துகிறது.

ஜெயசீலன்:—நண்பா இருக்கும்வரையில் செலவழித்துவிட்டு பிற்காலத்தில் எங்கு ஏசகம் எடுப்பது.

மனோகரன்:—வாஸ்தவம் தற்சமயம் டின்னர்பார்ட் நடத்து பவர் தமக்கு உறவினரா அல்லது நண்பரா.

ஜெயசீலன்:—எனக்கு நண்பர்தான்

மனோகரன்:—உனது நண்பர் பிற்காலத்தில் எக்கதிபாவது அவரைப்பற்றி கிஞ்சிற்றேனும் கவனித்து பார்த்திரா.

ஜெயசீலன்:—நமக்கென்னசார் அவரின் மனம்போனபடியாக சிலவழிக்குறுர் நாமும் சேர்ந்து ஷோக் செய்வதுதான்.

மனோகரன்:—ஜெயசீலா தன்னைப்போல் மன்னுயிரையும் காப்பாற்ற எண்ணம் இருக்கவேண்டும். அவ்வித மனப்பான்மையுடையவர்களே சிநேகிதத்தில் சேர்ந்தவர்கள் நமக்கென்னவென்று கூறுபவர்கள் சிநேஹத்தில் சேர்ந்தவர்கள் அக்கொடியபழக்கமுடையோரின் சிநேகிதத்தைவிட நான்கு அறிவை படைத்த நாயிடத்தில் சிநேகித்தால் உயிர்போமளவும் அன்பை மறவாது ஆகலால் தாங்களுரைத்த வார்த்தை எனது செவியில் நாருசம் காயவைத்து ஊற்றினதைப்போலிருக்கிறது இவ்வித துர் எண்ணங்களை கைவிடும்படி நமஸ்கரிக்கிறேன்.

ஜெயசீலன்:—மனோகரா எந்தன் அறியாமையால் கூறிய இக்கொடியவார்த்தைக்காக தங்கள் என்மீது கருணைகூர்ந்து மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் உரைத்த வாக்கியத்தில் தத்துவம் எனது சிற்றறிவுக் கெட்டியது இன்றுமுதல் யான் அக்கொடிய துஷ்டர்களின் கூட்டத்தில் சேருவதுகிடையாது. இதுவே சத்தியம் யானும் தங்களைப்போல் நான்கு அணா கொடுத்து காங்கிரஸில் சேருகிறேன் காங்கிரஸ் கொடிய துர் எண்ணங்களை அடியோடு ஒழித்து நல்லறிவை புகட்டுகிறது. ஆகலால் இன்றே கதாணிந்து காங்கிரஸின் சந்தாதாராக சேருகிறேன்.

மனோகரன்:—ஜெயசீலா நம் நாட்டிலுள்ளவர்கள் ஒவ்வொரு வரும் நம்நாடு சுகம்பெற நம் ஏழை சகோதரர்கள் நலமடையும்படி கஷ்டப்படுவதால் ஆண்டவன் நமக்கு நல்லறிவும் ஞானத்தையும் புகட்டுவான் நம் பாரத நாட்டின் விடுதலை என்றோ அன்றுதான் நம்மன சாந்தியடையும் தோழா யான் கூறியதைப்பற்றி கவலையுறாதே சென்றுவருவாய்.

ஜெயசீலன்:—நல்லது அப்படியே.

கோதண்டரும்:—மனோகரா வருக வருக தங்கள் வரவு நல்வரவாகுக.

மனோகரன்:—கோதண்டரும் என்னவிசேடம் பெரும் ஜனக்கூட்டங்களும் உற்சாகங்களும் தென்படுகிறது யாது வைபவமோ ஒன்றும் புலப்படவில்லையே.

கோதண்டரும்:—மனோகரா இன்று நபத நண்பர்களுக்கெல்லாம் ஓர் டின்னர்பார்ட் நடத்துகிறேன் ஆதலால்தான் ஜனக்கூட்டம்.

மனோகரன்:—எனக்கு இவ்விஷயங்கள் தெரிவிக்கவில்லையே.

கோதண்டரும்:—தாங்கள் எனது சகோதரன் இருக்கானே சுத்த மடையன் அவன் காந்தி கதர் கதர் என்று பித்து பிடித்து அலைகுறான் அவனில் சேர்ந்தவர்கள் தங்களுக்கெல்லாம் இவ்விஷயங்கள் பிடிக்காது. ஆதலால்தான் அழைப்பு அனுப்பவில்லை.

மனோகரன்:—டின்னர்பார்ட்டில் தாங்கள் என்ன கெடுதலை செய்தீர்கள் அதைப்பற்றி யான் கூறிய விஷயமென்ன.

கோதண்டரும்:—மனோகரா தங்களுக்கெல்லாம் காங்கிரன் பித்துபிடித்ததால் மதுபானங்கள் என்றால் சீறிவிடுவீர்கள்.

மனோகரன்:—கோதண்டரும் தங்கள் நடத்தும் டின்னர்பார்ட்டில் கொடிய மது அரக்கனை முதன்மைஸ்தானம் பெற்றிருக்கிறான்: ஓ ஹோ இதுதான் நண்பர்களுக்குறிய டின்னர்பார்ட் அப்பா கோதண்டரும் நமது பெற்றோர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு சம்பாதித்தபொருளை தீயவழியில் செலவழித்து பிற்காலத்தில் நாம் எவ்வளவு கஷ்டத்துக்குள்ளாவோம். ஆகலால் நிகழ்காலம் வருங்காலம் இவைகளை யோசித்து செய்தல் மனிதப்பிறவிக் கழகு தரும் இக்கொடிய மதுவரக்கன் டின்னர் பார்ட்டை அறவே ஒழித்துவிடு நன்மையையிழந்து துன்பத்திற்குள்ளாகாதே சிறிது கவனித்துப்பார்க்க வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்:

கோதண்டரும்:—மனோகரா பேஷ் நீதான் மகா யோக்யன் நாங்களெல்லாம் முட்டாள்களா போடாபோ மடையா நீதான் மனிதனா நாங்களெல்லாம் மாடுகளா, கழுதைகளா, மகா சமர்த்தாய் புத்தி போதிக்கவந்தாய் வாயை மூடிக்கொண்டு நட இல்லையேல் தனக்கு வேண்டிய மரியாதைகள் நடக்கும்.

மதுஅரக்கனின் மாணாக்கர்கள்:—போயா போ உங்கள் அப்பன் சொத்தா போய்விட்டது சுத்த பயித்தியம் உங்கள் வார்த்தையெல்லாம் இங்கே செல்லாது போங்காணும். புண்யவான் எங்களுக்கெல்லாம் ஏதோ நல்லமாதிரியாக நடத்திவருகிறார் அவைகளை கெடுக்க எத்தனிக்கிறாப்

வார்த்தையாடாதே வெளியில்நட வென ஒருவன் கன்னத்தில் அறைந்தான். அவ்வடியைப்பட்டு மனோகரன் கீழேவிழுந்து சிறிதுநேரங்கழித்து எழுந்து ஹே கருணாகரா இக்கொடிய மதுவரக்கனால் எனது சகோதரர்கள் இவ்வாறு நிலைவடைகிறார்களே எப்பொழுது மது அரக்கன் ஒழிவானோ அந்தகாலத்தில்தான் பாரதநாடாகிய இந்தியாவில் மாதர் மக்களும் ஒன்றுகளித்து ஆனந்த பரவசமுற்று வாழ்வார்கள். என்னை கன்னத்தில் அறைந்து கீழேதள்ளிய சகோதரன் கைகள் என்ன வலிப்புற்றிருக்குமோ ஹே அன்னையே பாரததேவி உனக்கு இன்னும் தயைபுரிய மனம் இல்லையோ மாதா தீயவழியிற் செல்லும் எனது சகோதரர்களை நல்வழியில் திருப்பு தனக்கு மனமில்லையா ஆண்டவன் படைத்த ஈ எறும்பு எண்பத்துநான்கு லட்ச ஜீவராசிகளில் மானிடப்பிறவி எடுப்பது அரிதுயென பலவித நூற்களும் போதிக்கின்றன. இதனையுணர்ந்தும் கண் தெரிந்தும் கிணற்றில் விழுவதைப் போன்று மது அரக்கனால் மாண்டு மடிகிறார்களே ஆறறிவைக்கொடுத்து படைத்த பிர்மனையும் பொய்ப்பிக்கிறார்கள். ஆதலால் அன்னையே கருணைபுரிவாயென! அப்பா சகோதரர்களே சென்றுவருகிறேன். என விடைபெற்றான். மது அரக்கனின் மாயவலையிற்சிக்கி பரதவிக்கும் நேயர்கள் மனோகரன்மீது அதிக சினங்கொண்டு தாக்க தாக்க ஆரம்பித்தார்கள் அவர்களில் ஒருவன் அப்பா பொறுங்கள் அவர் கூறின வார்த்தைகளில் என்ன தாத்பரியம் கண்டுகொண்டீர்களா நமக்கு இடைஞ்சல் உற்பத்தி செய்கிறார்களென நமக்கெல்லாம் கோபம்மேவிடுகிறது அப்படியல்ல நீங்கள் அவசரப்படுவது செவிடன் காதில் ஊதின சங்கையொத்ததாய் இருக்கிறது இப்பொ

மூது நடக்கும் டின்னர்பார்ட்டில் அற்ப சந்தோஷமே தவிர நம் ஆயுள்வரைக்கும் நீடித்து யிருக்கக்கூடிய வையல்லவே அற்ப சந்தோஷத்திலும் நம் ஆயுள்வரை உண்டாகும் நன்மை துன்மைகளை யோசிக்கு மளவில் இவையனைத்தும் கொடியதாய் தான் தோற்றுகிறது. நீங்கள் அவரை கன்னத்திலறைந்து கீழேதள்ளியும் அவ் வடியை பட்டுக்கொண்டும் நம்மீது சினங்கொள்ளாமல் நமக்காக அன்னை பாரததேவியை தொழுது அவதியுறு கிறார். அவரின் உட்கருத்து என்னவென தெரிந்து கொள்ள சக்தியில்லாமையால் நமக்கு கோபம் என்னும் சண்டாளன் தூண்டிவிடுகிறான் எவ்விஷயங்களையும் ஆழ்ந்து யோசிக்காதவன்தான் சாகக்கடவது என்று முன்னோர் வாக்கியத்தினால் தெறிந்துக்கொள்ளல் வேண் டும். அரிச்சந்திரனை பொய்ப்பிக்கிறேன் யென சபதம் கூறிய விஸ்வாமித்திரன் மதுகுடத்தை தலையில்வைத்து தென்பாரிசம் போகின்றேன் யென ஆணையிட்டான். அதை யோசிக்குங்கால் மது கொடிய பஞ்சமா பாதக மென்றதெரியாத இந்தியன் ஒருவனாகிலும் நான் இந்திய னென்று மொழிவதற்கு மனந்துணியான். மனோகரன் கூறியவண்ணம் கண்தெரிந்தும் நாம் கிணற்றில்விழுவது நம்முடைய சுத்தமடைத்தனம் என்பதற்கு வேறு அத் தாட்சிவேண்டுமா இவைகளனைத்தும் கொடிது கொடிது கோதண்டரும் நாயுடு செய்யும் பஞ்சமா பாதகமற்ற டின்னர்பார்ட் வேண்டுவதில்லை வாருங்கள் செல்லலாம் என யாவரும்கூடி ஏகமனதாய் வெளியே வந்தார்கள்.

கோதண்டனும்:—சகோதரர்களே எங்கு செல்கின்றீர்கள் எல் லாம் முடிவடைந்தது வாருங்கள் நாம் குதூகலமாய் மதுவையருந்தி சந்தோஷிப்போம் என்றான்.

கருணாகரன்:—நண்பா போதும் போதும் தாங்கள் செய்வது குள்ளநரியின் கதையை யொத்திருக்கிறது.

கோதண்டனும்:—கருணாகரா என்ன தங்களுக்கு நீங்கிழைத் தேன் குள்ளநரி கதையென்றால் எனக்கு ஒன்றும் புலப் படவில்லையே.

கருணாகரன்:—நண்பா ஓர் குள்ளநரி பொரியில் அகப்பட்டு வாலை அறுபட்டுவந்து தனக்கவமானமென தன் கூட்டத் தாரையெல்லாம் வாலறும்படி வஞ்சித்த நரிக்கு உனக் கும் யாதொரு வித்தியாசமேயில்லை தேர்ந்த மதுவர்கள் மாய்கையில் அகப்பட்டுத் தத்தளிப்பது மல்லாமல் எங்க ளையும் அக்கொடிய மதுவரக்கனின் வலையிற் சிக்கவைக்க டின்னர் பார்ட்டி நடத்த எத்தனித்தாயே உம்முடைய சிநேகம் இன்றோடே ஒழிந்தது. இவையனைத்தும் தெரி யாமலோ கலியுக கண்ணன் மஹாத்மா காந்தி மது அரக் கனை நம் பாரதநாடாகிய தர்மமிகு இந்தியாவில் தலை காட்டா தொழிக்கவேணுமென்று கீதையில் அர்ச்சுன னுக்கு கர்னன் உபதேசம் கூறியதைப்போல் அவரின் காலமுழுதும் போதிக்கிறார் அவ்வுபதேசத்தை கவனிக் காமல் இருந்தால் நாம் மனிதப்பிறவியா அல்லது நான்கு அறிவையுடைய மிருகஜந்துவா தாங்களும் அக்கொடிய மதுவரக்கனை ஒழிக்கும்படி என்மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துகொள்வதுமன்றி தன் இரு பாதங்களுக்கும் நமஸ்கரிக்கிறேன்,

கோதண்டரும்:—ஏ அர்ப்ப சிநேகிதர்களே உங்களுக்கெல்லாம் கேவலம் சு. ம. மனோகரன் உபதேசம் செய்தானே அச் சண்டாளன்தான் எனது சகோதரன் ஜனார்த்தனத்தை

TAMIL NADU ARCHIVES LIBRARY 104695 14

கெட்டவழியில்திருப்பி நான்காயிரம் ஐயாயிரம் ரூபாய்க்குமேல் சிலவழித்து கைகூட்டின தொழிற்சாலை வைத்து நடத்துகிறார்கள். அக்கதர் தொழிற்சாலை என்ன கெதியாகுமோ முழு மோசக்காரன் காந்திகாந்தி யென்று இவ்விதமாக அநேகர்களை ஏமாற்றிவருகிறான். ஆதலால் அவ்வார்த்தையை நீங்களும் நம்பி சென்றால் உங்கள் கதி யாதுவாகும். யோசித்துப்பாருங்கள் தாங்கள் எல்லோரும் போனாலும்சரி ரோட்டினில் போகும் ஜனங்களைக் கூப்பிட்டாகிலும் யான் என்காரியத்தை சாதித்துக் கொள்வேன் என கோபாவேசமாகக் கூறினான்.

கருணாகரன்:—கோதண்டராம் நாங்கள் கெடுவோமென்று கனவிலும் நினையாதே நீசெய்யும் அடாத காரியத்திற்கு நாங்கள் ஈடுபடுவதற்கு இசையோம். நிற்க, சு. ம மனோகரன் என்றனையே அவர்யார் எங்களுக்கு உபதேசித்த மனோகரன் காங்கிரஸின் ஊழியன் நீ மொழிவது இவரல்லவே.

கோதண்டராம்:—பாதகர்களே சு. ம. மனோகரன் யாரோ வென்று யோசிக்காதீர்கள் உங்களிடம் உதைப்பட்டு கீழேவிழுந்தானே ; சுத்த மடையன் அவன்தான் சு. ம. மனோகரன் என மொழிந்தான் இவ்வார்த்தையைக் கேட்ட யாவரும் கலகலவென நகைத்தார்கள். கோதண்டராம் நாயுடுக்கு கோபமோ கடலின் அலைபோல் ஒன்றின் மேலொன்றாப் குவிந்தது, மனம்போன போக்கெல்லாம் பிதற்றினான். அனைவரும் இவன்தான் சு. ம. வென மொழிந்து வெளியே வருகிறார்கள். கோதண்டராம் கற்களையும் பாட்டல்களையும் எடுத்து வீசினான் சிலருக்கு சொற்ப காயங்கள் பட்டது. இருந்தாலும் சாத்வீக அஹிம்சாதர்மத்தி லீடுபட்டவர்களாதலால்,

101498

கருணாகரன்:—சகோதரர்களே நல்லறிவும் ஞானமும்படைத்தவர்களிடத்தில் எவ்வளவுதூரமும் மொழியலாம் அவன் கேவலமாகிய சு. ம. பேர்வழி அவனிடம் யாம் வசனிப்பது அழகல்ல செல்லுவோம் யென அனைவரும் அவரவர்கள் இல்லத்துக்கேகினர்.

---

## அத்தியாயம் 5.

# சுற்பகஜோதி கதற் தொழிற்சாலை.

தெய்வசகாயம் மானேஜர்:—அருணாசலமுதலியார் அவர்களே தாங்கள் நமது கம்பெனிக்காக எத்தனை ஆட்கள் கணக்கில் எடுத்து இருக்கிறீர்கள்.

ரைட்டர் அருணாஜலம்:—மானேஜர் அவர்களே நூல் நூற்பதற்காக (5000) ஐயாயிரம் பேர்களும் நெசவு வேலைக்காக 1000 பேர்களும் பஞ்சை சுத்தி செய்வதற்கு 360 பேர்களும் எடுகூலி யாட்களாக 150 பேர்களும் ஆக மொத்தம் தொகை 6500 பேர்கள்.

தெய்வசகாயம்:—நமது முதலாளி ஜனார்த்தனம் நாயுடுகாரும் அவரின் அத்யந்த நண்பர் மனோகரனும் வருவார்கள் தங்கள் கணக்குப்படி அவர்களிடத்தில் கணக்கை பார்வையிடச்செய்யவேண்டும். ஜாக்கிரதையாயிரு நூல் நூற்கும் கைமுட்டின மேஸ்திரி கெங்காதர பிள்ளையும் நெசவு மேஸ்திரி முனுசாமி கவுண்டரையும் கிளீனர் செட்டு மேஸ்திரி மாணிக்க நாயுடுவையும் எடுகூலி ஆள் மேஸ்திரி லோகநாதனையும் சீக்கிரம்வரும்படி உத்திரவிடு

அருணாசலம் முதலி:—பியூன் ருஜாராம்

ருஜாரும்:—ஐயா இதோ வந்தேன்.

அருணாஜலம்:—ருஜாரும் அதிவிரைவாய்சென்று செங்காதரம் பிள்ளை முனுசாமி கவுண்டர் மாணிக்க நாயுடு லோகநாதம் இந்நால்வர்களையும் மானேஜர் அழைத்தாரென சீக்கிரம் வரும்படிசெய்.

ருஜாரும்:—ஐயா அப்படியே வென நடந்து அந்நால்வருக்கும் விஷயத்தை கூறினர். அந்நால்வரும் வெகு விரைவுடன் வந்து மானேஜரை கண்டார்கள்.

மானேஜர்:—மேஸ்திரிகளே தங்கள் தங்கள் தொழில் அதிக கவனம் செலுத்தி ஊக்கமுடன் கஷ்டப்பட்டு தொழிற்சாலையை வோங்கும்படி செய்வது தங்கள் கடமை ஆனாலும் நமது தொழிற்சாலை முதலாளி வருகிறார் தங்களைக் காண்பார் அச்சமயத்தில் தங்களின் மனக்குறைகளை எல்லாம் புகலுங்கள் அவர் உங்களனைவருக்கும் உபகாரம் செய்வார். ஜாக்கிரதையாய் தொழிலை நடத்துங்கள் சென்றுவாருங்களென விடைகொடுத்தார். அந்நால்வரும் சென்று தங்கள் தங்கள் வகுப்பில் வேலைசெய்யும் ஆட்களுக்கு விஷயங்களை போதித்தனர் தொழிலாளிகள் அனைவரும் மிகுந்த சந்தோஷிரந்தனுய் முதலாளியை காணவேண்டும் என்ற அபாவாய் இருந்தார்கள்.

அருணாஜலம்:—கேட்பியூன் கார்வரும் சப்தம் கேட்கிறது, கதவைத்திறவென்றதும் கதவு திறக்கப்பட்டது. கார் உள்ளேவந்ததும் காலையில் உதையமாகும் சூரியனின் கிரகணங்கள்போல் அக்காரில் ஜொலித்தது ஜனர்த்தனம் நாயுடுவும் மனோகரனும் அக்காரைவிட்டிறங்கினர்

கள். தொழிலாளர் யாவரும் மிகுந்த சந்தோஷத்தினி டையே மஹாத்மா காந்திக்கு ஜே! ஜனர்த்தனம் நாயு டுக்கு ஜே! ஜே! வென்ற கோஷ்டம் வானைப்பிறப்பதுபோ லிருந்தது.

மனோகரன்:—சகோதரர்களே! தொழிலாளர்களே! அனைவரும் இவ்வளவு சந்தோஷத்துடன் எங்களை வரவேற்றது போற் றத்தகுந்ததே எனினும் இந்த கற்பகஜோதி கதர்தொழிற் சாலை திறந்தது நம்போன்ற ஏழைமக்களுக்கு உதவியே தவிர நமது நண்பர் ஜனர்த்தனம் நாயுடு இவ்வளவு தயா ளமுடன் மனந்துணிந்து நான்காயிரம் ரூபாய் மூலதன மாக வைத்து நம் நாட்டின் ஏழைமக்கள் ஜீவிப்பதற்காக உதவியது அவரின் தயாள மனப்பான்மையே ஆனால் நீங்கள் அனைவரும் சிரமத்தை பொருட்படுத்தாது அவ ரவர்களின் தொழிலில் அக்கரைகாட்டுவதுதான் நாமெல் லாம் சுகப்படுவதற்கு வழி ஒவ்வொருவருடைய மனதி லும் பசுமரத்தாணிபோல் பதியவேண்டும் ஆதலால் இத்தொழிற்சாலை முதலாளி தங்களுக்கு போதிக்கும் உணர்ச்சியை மறக்கமாட்டீர்களென்று நம்புகிறேன் இப் பொழுது தொழிலாளர்களுக்கு நன்மை தன்மையே தெளிவுபடுத்தும்படி ! ஸ்ரீமான் ஜனர்த்தனம் நாயுடுவை கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜே! கரகோஷம்.

ஜனர்த்தனம் நாயுடு:—சகோதரர்களே! பெரியோர்களே! சிறி யோர்களே! தொழிலாளர்களே! தாங்களனைவரும் தொழி லாளிகளென்று யான் முதலாளியென்றும் என்னை கௌ ரவிக்கவேண்டுவதில்லை. தங்கள் தங்கள் தொழிலில் கவ னம்செலுத்தி கதரை உற்பத்திசெய்வது தங்களின் கட

மையே தவிர என்னால் யாதொன்றும் இயலாத காரியம் தாங்கள் செய்யும் தொழிலில் எவ்வளவு லாபம் வந்தாலும் நீங்களே அதை பகிர்ந்துகொள்ளுங்கள் எனக்கு தங்களின் ஆசிர்வாதங்கள்தான் பெரியலாபமெனக் கருதுவேன் தங்கள் வயற்றுக்கு கால்வயறு கஞ்சி வார்ப்பதற்காக நம் பாரதநாட்டின் சகோதரர்கள் கதரை யணியாமல் மேனாட்டு நாகரீகத்திற் காசைவைத்தால் உங்கள் வயற்றில் மண்ணைப்போட்ட மாதிரியாகும். அவர்கள் நரகவேதனைக்குள்ளாவார்கள் இது என் மனப்பூர்வகமாக கூறுகிறேன் இத்தொழிற்சாலையை நடத்த மானேஜராய் இருக்கும் தெய்வசகாயம் அவர்கள்தான் உங்களுக்கு வழிகாட்டியாய் நிற்கவேண்டும்.
தெய்வசகாயம்.

தெய்வசகாயம்:—ஐயா இதோவந்தேன்.

ஜனார்த்தனம் நாயுடு:—மானேஜர் அவர்களே கணக்குபிள்ளை அருணாசலம் அவர்களே இத்தொழிற்சாலையில் வரும் லாபத்தை தொழிலாளிகள் ஒவ்வொரு குடும்பத்தின் அளவையறிந்து பகிர்ந்து கொடுக்குமாறு தங்களிருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். நம் நாட்டின் கதர் அபிவிருத்தியைக்கண்டு கதரையணியாமலும் நம் நாட்டு மக்கள் எக்கெதியாகினும் சரி நாமும் நம் குடும்பங்களும் சுக ஜீவியாய் வாழ்ந்தால் போதுமென்றிருக்கும் தேசத்துரோகிகள்தான் உங்களை ஆதரிக்கமாட்டார்கள் ஆனால் அவ்வித துர் எண்ணங்கள் கொண்டவர்கள் சிலரேயாவர்கள். அவர்கள்மீது யாரும் துவேஷங்கொள்ளக்கூடாது. அவர்களும் நமது சகோதரர்கள்தான் தாங்களனைவரும் கண்ணனின் சக்கரமாகிய கைராட்டினத்தை சுழட்டிடு

போது அவர்களின் மனம் நாளுக்குநாள் பஞ்சு எவ்வி தத்தில் நம்மால் நூலாகி ஆடையாகி உதவியளிக்கின் றதோ அத்தன்மைபோல் அவர்களும் உதவிபுரிவார்கள் ஆனால் ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் தொழிலா லர்கள் இருக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர்கள்:—ஓ முதல்வா கருணைகூர்ந்து அடியேங்க ளுக்கு தயைபுரிந்த புண்யா தங்களின் இளகிய மனதைப் போல் தங்களைவிட தனவந்தர்கள் எத்தனையோ நபர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இவ்வேழைகள்மீது கிருபை கூர்ந்து ஒவ்வொரு தொழிற்சாலையை வைத்து நடத்தி னால் நமது நாட்டின் வறுமைப்பேய் தலைகாட்டா தொழி வதற்கு புகலவும் வேண்டுமா அன்னிய நாட்டினர் பொருளை எதிர்பார்க்கவேண்டுவதில்லையே ஐயா தங்க ளுக்கு இவ்வேழைகள் மீது தயைசெய்வதற்கு ஞான மார்க்கத்தையும் சாத்வீக அஹிம்சா தர்மத்தையும் போதித்த தன்னலம்கருதா அண்ணல் மஹாத்மா காந்தி எங்களையும் எங்கள் மக்களையும் வாட்டிய பசிப்பிணியை ஓட்டிடச்செய்ததற்காக அன்னார்க்கு எங்கள் நன்றியறி தலை தெரியப்படுத்திக்கொள்ளுகிறோம். அதன்றி தங்கள் மேன்மையான குணத்தை இன்னும் அதிகமாக்கவேணு மென கடவுளை பிரார்த்திக்கின்றனம் எனக்கூறி அவரவர் கள் தொழிலுக்கு போகும்படி ஜனார்த்தனநாயுடு உத்தர வளித்தார். தொழிலாளர்கள்யாவரும் சென்றபின் தனது நண்பன் மனோகரனை அழைத்து நாம் ஹரிஜன சிறுமி களின் பாடசாலையைக்கண்டு செல்வோமென இருவரும் யாவரிடத்திலும் விடைபெற்று தன் காரில் ஏறிச் சென் றார்கள்.

---

17

## அத்தியாயம் 6.

# கோதண்டரும் நாயுடுவின் டின்னர்பார்ட் வைபவம்.

கோதண்டரும் நாயுடு:—துணைவர்களெல்லாம் சென்றபின் மனந்திகைத்து சிறிதுநேரங்கழித்து ரோட்டினில்போகும் ஜனங்களையெல்லாம் வலிபந்தமாய் அழைத்துவந்து மதுவரக்கனின் மாய்கையில் சிக்கவைத்தான் விவேகமுளரா முண்டங்கள் எத்தனையோ இருக்கிறது அவைகளெல்லாம் இதற்கிசைந்தன அக்கூட்டத்தில் ஒருவன் ஐயா இவை கொடியது எனக்கு வேண்டாம் இவ்விஷயம் தெரிந்தால் இந்த வாசற்படியில் காலைவைத்திருக்கமாட்டேன் என எழுந்தான் கோதண்டரும் நாயுடுக்கு கோபம் வந்துவிட்டது.

கோதண்டரும் நாயுடு:—அடடே இவன்தான் பெரிய ஞானவான் முட்டாள் கழுதை நாயே போடாபோ நீ சென்றால் எனக்கு ஒன்றும் நஷ்டமில்லையெனக் கூறினன்.

தேவருஜி:—கோதண்டரும் நாயுடு யான் முட்டாள் கழுதையல்ல கழுதையென கேவலமாய் மொழிந்தீர் வாஸ்தவந்தான் அக்கழுதையினிடத்தில் கள் சாருபங்களை ஊற்றிவையுங்கள் அருந்துமா பார்க்கலாம் கழுதையே அவைகள் கொடியதுயென தள்ளிவிட்டதை நாம் அருந்தினல் நாம் என்ன ஜெர்துவாயிருப்போம் கவனித்துபாருங்கள் ஆனலும் நாயே என்கின்றீர் அந்த நாயிடத்திலும் மது

வரக்கனேவைத்துப் பாருங்கள் அந்நாயும் உவைகளே யருந்தாது என்றால் யான் கழுதையா, நாயா, அல்ல- அல்ல-யான் மனிதன் எந்தன் நாமதேயம் தேவருஜி உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் தாங்களே யோசித்துப்பாருங்கள் என்றவுடன் நமது ஸ்ரீ மான் கோதண்டரும் நாயுடுகாருக்கு கோபமேலிட்டு அவனே தாக்குவதற்காக அருகில் நெருங்கினர். அச்சமயத்தில் அங்கிருந்தவர்கள் அவரை தடுத்தார்கள்.

தேவருஜி.—ஐயா எந்தன் மீது தாங்கள் கோபிப்பது எவ்விதமென்றால் நமது கர்நாடகத்தார் ஒரு பழமொழி கூறுவது யாதெனில்,

இஞ்சிக்கு ஏலம் கொண்டாட்டம்
எலுமிச்சம் பழத்துக்கு புளிப்பு கொண்டாட்டம்
வேசிக்கு பணம் கொண்டாட்டம்
கேடுகெட்ட முண்டத்துக்கு கோபம்கொண்டாட்டம்

என பழமொழி பாடுவார்கள். அம்மொழிக்குத் தாங்களுக்கு யாதொரு வித்தியாசமே இல்லையெனமொழிந்து நடக்கலுற்றான்.

கோதண்டரும் நாயுடு—சகோதரர்களே அம்முண்டம் போனால் போகிறான் நாமெல்லோரும் ஆனந்தமாய் உண்டுகளித்து சுகம்பெறலாம்பென யாவரும் மதுவரக்கனின் மாய்கையில் சிக்கினர்கள். மதுவரக்கனின் விஷம் மண்டைக்கேறிவிட்டது. ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு பெரிய கலவரத்தினிடையே வெளிவந்தார்கள். கோதண்டரும் நாயுடு மனதுக்கு தகுந்தாற்போல் சிலர் சேர்ந்தார்கள. இவர்களெல்லாம் மதுவருந்துவதிலும்

வேசியர்களின் மாயவலையிலும் சிக்கி நாட்கழித்தார்கள். அத்தருணத்தில் இவர்கள் நடத்தையைக் கண்ட பெரிய உத்யோகஸ்தர் ஒருவர் இவர்களைத் துணைகொண்டார் பெரிய உத்தியோகஸ்தர் யாரென்று வாசகர்கள் கேட்கலாம். அவர்தான் கோவலன் சரித்திரத்தில் உத்தமி மாதவியுடன் வந்தவரைப்போன்ற மாமா. கோதண்டரும் நாயுடுவை வெகுநாளாய் கண்டவரைப்போன்று,

மாமா:—சார் தங்களைக்கண்டு வெகுநாளாகிறது இன்று காண்பதற்கு கடவுள் செயல் கிடைத்தது. ஆனால் தாங்களும் தம்முடைய தாய் தந்தையர்களும் சௌக்கியம்தானே.

கோதண்டரும்:—நண்பா வருக வருக உம்மைப்போன்ற நண்பன் இல்லாததால் எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது தாங்கள் சௌக்கியந்தானே.

மாமா:—அடியேன் சௌக்கியந்தான் ஆ—னா—ல் நல்லதுணை தங்களுக்கு கி—டை—த்—தா—ல் மிகவும் பொருத்தமாயிருக்கும்.

கோதண்டரும்:—நண்பா என்னபொருள் தங்கள் மனதில் யாதொன்றும் ஒளியாமல் புகலவேணுமாய்கோருகிறேன்

மாமா:—நாயுடு அவர்களே தங்களின் நற்காலத்தின் பயன் தான் நானுங்களை சந்தித்தேன் ஆனால் தாங்கள் யானுரைப்பதைப்போல் நடந்தால் வேண்டிய அளவில் தனவந்தராகி ஸ்ரீமானாய் பெயரெடுப்பீர்கள் இருந்தாலும் என்னையும் சிறிது கவனிக்கவேணும்.

கோதண்டரும்:—நண்பா உன்னால்தான் நான் நல்வழியாக வேணும் உந்தனை சிறிதேனும் வஞ்சிக்கமாட்டேன். ஆகையால் விஷயத்தை மாத்திரம் தெளிவாய் உரைசெய்யவேண்டுமென கெஞ்சினான்.

மாமா:—நாயுடுகார் சென்னையில் ஒரு விலையுயர்ந்த மாணிக்கம் இருக்கிறது. அதனிடத்தில் தங்களை சேர்த்து விடுகிறேன். ஆனால் வெகு பிரயாசைப்படவேண்டியது இருக்கிறது எப்படியாகிலும் கட்டாயம் முடித்து தீருவேன்.

கோதண்டரும்.—நண்பா ஆ ஹா என்ன மாணிக்கமா எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே.

மாமா:—சார் மாணிக்கமா அது நவரத்தினத்தையும் தோற்கடிக்கும் அழகு முக வசிகரத்தையும் ஆதிசேடனாலும் வர்ணிக்கப்போதாது யென்றால் யான் எவ்வளவு அவ்வளவு உள்ள தர்மகுணம் நிறைந்த யுவதியை தாங்கள் கண்டால் யாதுவாகும்.

கோதண்டரும்:—ஹா நண்பா இவ்விஷயம் மொழிவதற்காக இவ்வளவு தாமதம் அவ்வளவு அழகுவாய்ந்த ஸ்திரியை காணவிடில் நாமென்ன பேடிகளா இட்க்ஷணமே நாம் அங்கு செல்லவேண்டும் யாது புகல்கின்றாய்.

மாமா:—நாயுடு அவசரப்படாதீர்கள் சிறிது நேரம் தாமதியுங்கள் யான் சென்று தங்களின் விஷயங்களை அம்மாளிட மனதில் பசுமரத்தாணிபோல் பதியவைத்து வருகிறேன் அதன்பின் தங்களை அழைத்தேகுகிறேன் எனக்கு விடையளியுங்கள்.

கோதண்டரும்:—நண்பா தாங்கள் வருவதற்கு எவ்வளவுநேரமாகுமோ ஆனால் தங்கள் நாமதேயமும், அம்மாதின் நாமதேயமும் மொழியுங்கள்.

மாமா:—ஓ ஹோ எந்தன் நாமதேயம் மோகன ராஜாபிள்ளை அம்மாளின் பெயர் புஷ்பரஞ்சிதம் கியாபகமாயிருங்கள்

கோதண்டரும்:—மோகனருஜா சீக்கிரம் வராவிடில் என் ஆவி நிற்காது. இதோ இந்த நூறுரூபாய் வழிசிலவுக்கு வைத்துக்கொள் என்ருர்.

மாமா:—நாயுடு அவர்களே இந்த நூறுரூபாய் பெரிதல்ல ஆனல் நமக்கெல்லாம் விசுவாசந்தான் பெரிது. இந்த ரூபாய் புஷ்பரஞ்சிதம் வீட்டுக்குப்போய் சேருவதற்குள் நிற்காது. அந்தம்மாளிடம் எதைகொடுத்து தங்களுக்கு வழிபடுத்துகிறது இதுதா—ன். சிறிது கஷ்ட—ம் என புகன்ருன்.

கோதண்டரும்:—மோகனருஜ் சரி ஆனல் இதோ ஆயிரம் ரூபாய்க்கு செக் எழுதி கொடுக்கிறேன். அதை பெற்றுக் கொண்டுபோய் என் கண்மணி புஷ்பரஞ்சிதம் வசம் கூடிய சீக்கிரம் கொடுத்து அழைத்துவர வேண்டு மென்று நம்புகிறேன்.

மோகனருஜ்.— நாயுடு அவர்களே தங்கள் சித்தப்படியே முடித்துவிடுகிறேன் தாங்கள் என்னையு மறந்துவிடப் போகிறீர்கள் எனக்கூறி சென்ருன். கோதண்டராம் மோகனருஜ் வரவை எதிர்பார்த்தது கண்களும் பஞ்ச டைகிறது அதே கவலையாய் நமது ஸ்ரீமான் நாயுடு வழி பார்த்துக்கொண்டிருந்தார்.

---

## அத்தியாயம் 7.

### சென்னை

## ஹரிஜன பால்யர் பாடசாலை.

தலைமை உபாத்தியாயினி:— ஆயா நமது ஸ்கூலின் சிறுமி களையெல்லாம் அழைத்துவந்தீர்களா.

ஆயா:—அம்மா தங்கள் உத்தரவை சிரமேற்கொண்டு? நமது ஸ்கூல் சிறுமிகளெல்லாம் வந்து சேர்ந்தார்கள். ஆனால் எனக்கு சம்பளம் போதாது தாங்கள் தயைசெய்ய வேணும்.

தா-உ:—ஆயா நமக்கெல்லாம் நல்லகாலம் வந்திருக்கிறது. நீ அதைரியப்படவேண்டாம் இந்த ஸ்கூலுக்காக திரவியம் யாவும் தந்து 2 லட்சம் ரூபாய் மூலதனமாகவைத்து நடத்தும் புண்டவான் இன்று இங்கு விஜயம்செய்யப் போகிறார் அவரிடத்தில் நம் குறைகளை யுரைத்தால் நலன்கிடைக்கும். ஆதலால் ஒவ்வொரு வகுப்பு உபாத்தி யாயினிகளுக்கும் விஷயங்களை தெரியப்படுத்து இதோ சீட்டைப்பார்த்து அந்தந்த பெயர் உள்ளவரிடத்தில் கொடுத்துவிடு.

ஆயா:—அம்மா எனக்கு வாசிப்புகிடையாது தாங்கள் புகன்றால் அத்தன்மைபோல் கொடுத்துவிடுவேன்.

த-உ:—ஆயா இதை தெரிந்துக்கொள் டீச்சர் கோமளாம்பாள்! டீச்சர் ஞானம்பாள் 2 டீச்சர் சிங்காரம்மாள் 3 டீச்சர் மனோன்மணி அம்மாள் 4 டீச்சர் துரைராஜம்மாள் 5 டீச்சர் மோஹனம்பாள் 6 இவர்கள் ஆறுபேருக்கும் கொடுத்துவிடு.

ஆயா:—அம்மா அப்படியேயென ஒவ்வொருவரிடத்திலும் கடிதம் கொடுக்கப்பட்டது. அவரவர்கள் தன்தன் வகுப்பு மாணவிகளுக்கு விஷயத்தை போதித்து தயாரித்தார் கள். ஜனார்த்தனம் மனோகரன் இருவரும் வரும் காரின் சப்தம் கேட்டது. உபாத்தியாயினி முதல் சிறுமிகளும் ஜனார்த்தனம் வரவை எதிர்நோக்கி ஆவலாய் இருந்தார் கள் கார் வந்து நின்றது. ஜனார்த்தனமும் மனோகரனும்

வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்து என்ற ஆன்றோர் மூது ரைப்படி தெள்ளிய வெண்மை நிறத்தையுடைய கத ரணிந்து இளஞ்சூரியன்போல் தோன்றத்தக்க முறையில் வண்டியைவிட்டிறங்கினார்கள்.

---

## பாடசாலை மாணவிகள் ஜனாத்தனம் நாயுடுவை வரவேற்புக்காக்ஷியில் பாடல் பாடுவது.

கைறாட்டினமே கதர் பூட்டினமே (என்ற மெட்டு)

பல்லவி.

வருவீர் வருவீர் வள்ளலார் வருவீர் (வரு)

அநுபல்லவி தொடர்.

தந்தையைப்போல் எங்களையே கார்க்கவந்தீரே
தயாளமுடன் கல்வியதை போதித்தவரே
புகழுடைவீரே புண்யனும்நீரே (வ)

காந்திமஹான் வார்த்தையதை கண்யமாய்க்கொண்டு
கல்விக்காக திரவியங்கள் புரிந்தீரே தொண்டு
கருணை கடலே கதிநியருளே
தந்தையர் தொழில்புரிய தயைசெய்த புண்யா
தாரணியில் கதருற்பத்தி செய்திட்ட கண்யா
நாடுசெழிக்க நாங்களும் பிழைக்க (வரு)

தங்களருள்பெற்ற டீச்சர்களும் வாழ்ந்திட
சிங்காரவேல் செந்தமிழை யாங்கள் பாடிட
சிரம்வணங்கினோம் தன்பாதம் நம்பினோம் (வரு)

மனோகரன்:—ஆ ஹரிஜனச்சிறுமிகளே தங்களின் அன்பைக் கண்டு கல்நெஞ்சமுடையோனும் இரக்கங்கொள்ளாமல் இருப்பதற்கில்லை உங்கள் உபாத்தியாயினிகள் போதிக்கும் கல்வியை ஊக்கத்துடன் கவனித்து வாசித்து மேன் மேலும் விருத்தியடைந்து இந்த ஹரிஜன பாடசாலையை திறந்துவைத்த ஜனார்த்தனம்நாயுடு அவர்களின் பெயரை நிலைநாட்டி தேசசேவையிலீடுபட்டு தேசத்திற்கு உழைக்க கங்கணங்கட்டிக்கொள்ளுங்கள் இதன்றி உங்களுக்காக அருந்தியாகம்செய்த ஜனார்த்தனம் நாயுடுவை அறிமுகப்படுத்தி வைக்கிறேன் அவர் கூறும் மொழிகளை யேற்று அதன்படி நடக்கவேணுமாய் கோருகிறேன் என முடித்தார்.

யாவரும் பெரிய கரகோஷம் மஹாத்மா காந்திக்கு ஜே! ஜனார்த்தனம் நாயுடுக்கு ஜே! மனோகரனுக்கு ஜே. ஜே! வென கோஷ்டமிட்டனர், அக்கோஷ்டத்தினிடையே ஜனார்த்தனம் நாயுடு எழுந்து நின்று உபாத்தியாயினிகளே சிறுமிகளே யான் கூறக்கூடிய விஷயமனைத்தும் எனது நண்பர் மனோகரன் கூறிமுடித்தார். ஆனால் யான் கூறக்கூடிய விஷயம் யாதெனில்,

ஜனார்த்தனம்:—உபாத்தியாயினிகளே தாங்களனைவரும் ஏக மனதாய் இச்சிறுமிகளுக்கு கல்வியின் பெருமையை பாலும் பழமும் சேர்ந்தாற்போல் இன்பம் ததும்பும்படி போதித்தல் அவர்களின் மனதுக்கு உற்சாகமூட்டும் வகையில் நமதிந்திய நாட்டின் விடுதலைப்பெறுவது நம் நாட்டின் பழைய நீதிக்கதைகள் பல அரிய நூற்களை போதித்தல் இவைகளை தாங்கள் மனதிடத்துடன் போதிக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறுமிகளே தங்களே நல்வழியில்திருப்ப நான் அருகதை யுள்ளவனல்லன் பாரதத்தாய் அருளினலும் உங்கள் உபாத்தி யாயினிகளின் முயற்சியினலும் நீங்கள் மேன்மேலும் விருத்தி யாவதல்லால் எங்களாலாகாது தங்களுக்குவேண்டிய யாவும் பாரததேவியின் அருளால் கிடைக்கும் நாங்கள் சென்று வரு கிறேம் பத்திரமாயிருங்கள் என தன் பிரசங்கத்தை முடித் தார். ஜே! கரகோஷம் பாரதத்தாய்க்கு ஜே! மகாத்மா காந் திக்கு ஜே! ஜனர்த்தனம் நாயுடுகாருக்கு ஜே! மனேகரனுக்கு ஜே! வென கோஷ்டம் வானைப்பிளக்தது ஜனர்த்தனமும் மனேகரனும் விடைபெற்று தன் காரில் ஏறி பிரயாண மானர்கள்.

## அத்தியாயம் 8.

## புஷ்பரஞ்சிதம் அரண்மனே.

புஷ்பரஞ்சிதம்:—வேளைக்காரி குப்பி குப்பி.

குப்பி:—அம்மா இதோவந்தேன்.

புஷ்பரஞ்சிதம்:—குப்பி அந்த கிழட்டுபிணத்தை கூப்பிடு.

குப்பி:—அம்மா உங்களே சின்ன அம்மா அழைக்குறங்கோ.

கிழவி:—சரி என்ன நினைந்துகொண்டாளோ என் உயிரை யெடுக்கிறுள் அந்தப்பாவி டாபர் எங்கையோ வொழிந் தான் ஊம் பார்க்கலாம். புஷ்பரஞ்சிதம் என்ன விசே டம்மா.

புஷ்பரஞ்சிதம்:—இங்கேவா உங்களுக்கெல்லாம் என்ன விச னம்யார்வந்தாலென்ன போனலென்ன வேளைக்குவேளை

காப்பியும், டலாரமும், போஜனமும், நடத்திவிடுவ. அந்த சண்டாளன் சென்றுனே அவன் எக்கெதிபடைக் தானே அவன் வொழிகட்டும் யான். கோவிலுக்காகிலும் போய்வருகிறேன் குப்பி ஒரு ரிக்ஷாகாரனைக் கூப்பிடு.

குப்பி:—அப்படியே வென வெளியில் வந்தாள்.

குப்பி:—அம்மா அம்மா

புஷ்பரஞ்சிதம்:—என்னடி அது.

குப்பி:—மோகனருஜ் வெகு ஆனந்தமுடன் ரிக்ஷாவில் வருகிறார் என்றதும்,

புஷ்பரஞ்சிதம்:—அம்மா மோகனருஜ் வருகிறாராம் எதுவோ நல்ல கிறுக்கி பட்டதுபோலிருக்கிறது யென்று தாய்க் கிழவியும் புஷ்பரஞ்சிதமும் சம்பாஷிக்கத் துடங்கினர்கள் மோகனருஜும் வந்து சேர்ந்தார்.

மோகனருஜ்:—புஷ்பரஞ்சிதம் நான் வரவில்லையென்று என்னென்ன தூஷித்தாயோ இருக்கட்டும் நான் எப்பேர்ப்பட்ட பேர்வழி தெரியுமல்லவோ.

புஷ்பரஞ்சிதம்:—மாமாவின் சாமத்தியம் யாருக்குவரும் நீ இல்லாவிட்டால் எங்கள் கெதியென்ன.

மோகனருஜ்:—புஷ்பரஞ்சிதம் இதோபார் உந்தன் பெயரை புகன்று ஆயிரரூபாய் செக் வாங்கிவந்தேன் பார் ஆனல் நல்ல மாடுதான் சுமார் 5 ரூபா இருக்கும் ஒருமாதத்திற்குள் சரிபடுத்தி அனுப்பிவிடணும். ஆனல் அவன் சத்தபடையுடன் உன்னிடத்தில் வந்தானே இல்லையோ அவ்வளவுதான் அவன்கெதி அதோகதிதான் எனக்கு தெரிந்ததுதானே உன் சாமர்த்தியம்.

புஷ்பரஞ்சிதம்:—மாமா தாங்கள் வந்தபோதே அழைத்து வரக்கூடாதா.

மோகனரூஜ்:—ஆமாம் நாம் செய்வது மோசமாயிருந்தாலும் பிருவாயல்லவோ நம் காரியத்தை சாதிக்கவேணும். ஆனல் முதல் நீ செய்யவேண்டிய வேலை என்ன தெரியுமா நமது வீதி கடைசியில் அட்வோகேட் சுப்ரமணிய சாஸ்திரி இருக்கிறரே அவரின் பங்களா தோட்டம் உள்பட 4 லட்ச ரூபாய்க்கு தீர்மானித்திருக்கிறது. அ தை தா ன் முந்தி முடித்துக்கொள்ளவேண்டும். உஷா.ர்

புஷ்பரஞ்சிதம்:—ஆம் மாமா சுப்ரமணிய சாஸ்திரியாருக்கு அவ்வளவு கடன் வருவதற்கு என்னவழி.

மோசனரூஜ்:—ஓ வழியா இந்த ஊரில் எவ்வளவு தனவந்தர்கள் கெட்டார்கள். அவைகளில் அவர் சென்றது ஒரு வழி எவ்வழியென்றல் கிண்டிரேஸ் இருக்கிறதே அது தான் அவரை சாப்பிட்டு ஏப்பமிட்டது. என்றதும்,

புஷ்பரஞ்சிதம்:—மாமா அதுபோகட்டும் அவரை சீக்கிரம் அழைத்துவா மற்ற விஷயங்களை யோசிக்கலாம்

மோகனரூஜ்:—அப்படியே சென்றுவருகிறேன் பென நடந்தான்.

கோதண்டரூம்:—நண்பர்களே எல்லோரும் சென்று வாருங்கள் யான் சிறிது வேலையாக செல்கின்றேன். ஆதலால் நாளைக்கு வந்துவிடுங்கள் பென விடைகொடுத்தான். யாவரும் சென்ருர்கள். கோதண்டரூம் மோகனரூஜ் வரவை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தான் மோகனராஜ் வெகு துரிதமாய் வருகின்றுன். இவன் வருகிறதை

கண்ட கோதண்டரும் கற்கண்டு பந்தலில் தேன்மாரி பொழியும் மேகமென நினைத்து அளவிலா ஆனந்த முற்றான்.

மோகனரூஜ்:—அப்பா போதும் போதும்.

கோதண்டரும்:—மோகனரூஜ் என்ன அவ்வளவு கஷ்டம்.

மோகனரூஜ்:—என்ன கஷ்டமா தங்களைப்பற்றி புஷ்பரஞ்சிதம்வசம் நான்போய் பட்டது கேவலமானநாயும் படாது யான் தங்கள் விஷயத்தை மெள்ள சென்று கடுகளவு விட்டதுதான் தாமதம் அப்பப்பா வடபத்திர காளி போல் துள்ளி என்மீது பாய்ந்தாள் யான் அவ்வளவும் பொருத்து தங்களுக்கு கூறியவார்த்தையை நிறைவேற்ற வேண்டி வெகு சிரமப்பட்டேன் சிறிதுநேரங்கழித்து புஷ்பரஞ்சிதம் தாயாரிடம் மெள்ள சம்பாஷித்து அதன் பின் புஷ்பரஞ்சிதம் நமது வழிக்கு வரும்படி செய்து முடித்தபிறகுதான் இங்குவந்தேன் ஆனால் அந்த கிழ வியை மாத்திரம் சரிப்படுத்திக்கொள்ளுங்கள்.

கோதண்டரும்:—காரியம் முடிந்துவிட்டது போகலா மல்லவா சீக்கிரம் புறப்படு.

மோகனரூஜ்:—நாயுடு நம்மை மறந்துவிடக்கூடாது.

கோதண்டரும்:—மோகனரூஜ் தாங்கள் எப்படி புகல்வீரோ அத்தலைமைபோல் யானும் நடப்பேன் நமது கார் டிரைவரைக் கூப்பிடு.

மோகனரூஜ்:—டிரைவர் சாமிநாதம் நாயுடு அழைக்குறூர்.

டிரைவர்:—சாமிநாதம் கார் கொண்டுவந்து நிறுத்தினன். இருவரும் அமர்ந்தார்கள். டிரைவர் காரை செலுத்தினர் மோகனரூஜ் டிரைவரை நுங்கம்பாக்கம் ஹைரோட்

1/105 பங்களாவின் கேட்டினருகில் நிறுத்தினான். கார் சப்தம் கேட்டதும் தாய்க்கிழவி ஓடிவந்து எட்டிப்பார்த்தாள். மோகனரூஜை கண்டதும் புஷ்பரஞ்சிதம் வந்து விட்டார்கள் உஷார். வேலையை முடித்துக்கொள். கோதண்டரும் நாயுடு மோகனரூஜ் இருவரும் வெகு சந்தோஷமாய் அவ்வரண்மனையில் சென்றனர். உள் நுழைந்ததும் வேலைக்காரி சந்தனம் புஷ்பச்செண்டுகள் வைத்த வெள்ளி தாம்பாளத்தில் கொண்டுவந்து நீட்டினாள். கோதண்டரும் அவைகளை வெகு ஆனந்தமுடன் எடுத்தார் தாய்க்கிழவி வாசனை திரவியங்களை இவரின் மேல் தூவி வெகு ஆடம்பரமுடன் அழைத்து இச்சோபாவிலமருங்கள் யென மொழிந்தாள். கோதண்டரும் நாயுடு அமர்ந்தார். மோகனரூஜ் தாய்க்கிழவியிடம் அம்மா இனி உன் சாமார்த்தியம்தான் புஷ்பரஞ்சிதம் இவர்மீது அன்புகொள்ளும்படி செய்வது உமதுகடமை தான் யான் சிறிதுநேரம் வெளியில் இருந்து வருகிறேன் யென விடைபெற்று சென்றாள். நாயுடு அவர்களுக்கு அவன் போனால் போகட்டும் நம் காரியம் இங்கே முடியப்போகிறதுயென்றிருந்தார்.

கிழவி:—ஐயா என்ன விஷயம் மோகனரூஜ் தங்களுக்கு தெரியுமா.

கோதண்டரும்:—வெகுநாளாக தெரியும்.

தாய்க்கிழவி.—சரி என்னமோ தாங்கள் வந்தது நல்லது ஆனால் தங்கள் மன உறுதியுடன் நிற்கவேண்டும், என் குமாரத்தி தங்களுக்கு இசையவில்லை மோகனரூஜ் தங்கள் விஷயத்தை கூறினான். அதன்பின்தான் நான் சம்மதித்து அழைத்துவரும்படி புகன்றேன் கொஞ்சம் பிகு

லகுவாயிருங்கள் புஷ்பரஞ்சிதம் வசம் அவசரப்படாதீர்கள் அவள் ஏதாகிலும் கேட்டால் அப்படியே ஆகட்டும் என்று கூறி தங்கள் மனதை திருப்தியாக்கிக் கொள்ளுங்கள்.

கோதண்டரும்:—நான் இங்கு வந்தது தங்களின் மனதை திருப்தியாக்குவதற்கே அதைப்பற்றி கவலேவேண்டாம். அப்பெண்மணியை அழைத்துவாருங்கள்.

தாக்கிழவி:—புஷ்பரஞ்சிதம் புஷ்பரஞ்சிதம்.

புஷ்பரஞ்சிதம்:—ஏனம்மா பெரிய பலே வந்துவிட்டதா:

தாக்கிழவி:—அம்மா இங்கேவா ஐயாவைக் கண்டுகொள் கோபப்படாதே யான் மொழியும் வார்த்தையை தள்ளாதே அவருக்கு எல்லாம் தெரியும்வா அம்மா புஷ்பரஞ்சிதம் பெல்லிய நடையோ அன்னமும் இந்நடையைக் கண்டு வெட்கி தலேகுனியும்.| அவ்வளவு அருமையாய் வந்து ஏனம்மா அழைத்தீர்கள் பென வினவினுள்.

தாக்கிழவி.—நாயுடு அவர்களே குழந்தை அரியாதவள் இது நாள்வரையில் எந்த ஆடவரிடமும் நின்று பேசினதே கிடையாது தாங்களுக்குத்தான பிரமன் எழுதிவைத்தான் போலும் எதுவோ குழந்தை மனதை திருப்தியாக்கி சந்தோஷமாயிருங்கள் பென மொழிந்து வெளியில் சென்றுன்.

கோ-நாயுடு.—ஹா கண்மணி சந்திரனேப்பழிக்கும் முகத்தையுடைய சரசியே அருகில்வா. மனதில் யாதொரு கவலேயுருதே உனக்கு வேண்டிய அனேத்தும் கொடுத்து உந்தன் மனதை திருப்தியாக்குவேன் பென எழுந்து புஷ்பரஞ்சிதப் இருகரங்களேயும்பிடித்து அருகில் அமரச் செய்தார்.

புஷ்பரஞ்சிதம்.—ஆமாம் ஆண்பிள்ளைகள் தன் காரியம் சாதிக்குமளவில் இமயமலை சிகரத்தில்கூட ஏற்றிவைப்பேன் என்பார்கள் காரியம் முடிந்தால் பின் பார்க்கலாமென்று புகல்வது இயற்கையே தாங்கள் உரைப்பதும் அவ்வளவு தான்.

கோ-நாயுடு.—புஷ்பரஞ்சிதம் அப்படி நினையாதே உனக்கு அத்தகைய சந்தேகமிருந்தால் தனக்கு வேண்டியவற்றை இப்பொழுதே கூறினால் முடித்து கொடுக்கிறேன்.

புஷ்பரஞ்சிதம்.—அடியாள் கேட்டேனென்று கோபப்படாதீர் யாங்கள் இருக்கும் வீடு வாடகைவீடு தங்களைப்போல் பெரியமனிதர்வந்தால் ஆனந்தமுடன் இருப்பதற்கு வசதியில்லாமல் மனம் தவிக்கின்றது. ஆதலால் இந்த வீதி கடைசியில் தோட்டம் உள்பட பங்களாவும் சேர்த்து விற்கிறதாக தங்கள் நண்பர் மோகனரூஜ் கூறினர் அதை தாங்கள் முடித்து கொடுத்தால் நம்மிஷ்டம்போல் இருப்பதற்கு நலமாயிருக்கும்.

கோ-நாயுடு.—புஷ்பரஞ்சிதம் மோகனரூஜை அழைத்துவா.

புஷ்பரஞ்சிதம்.—குப்பி குப்பி.

வேலைக்காரி.—ஏனம்மா

புஷ்பரஞ்சிதம்.—நமது மோகனரூஜை அழைத்துவா.

வேலைக்காரி.—அம்மா இதோ வருகிறார்.

கோ-நாயுடு.—மோகனரூஜ் புஷ்பரஞ்சிதம் இவ்வீதி கடைசியில் ஓர் பங்களா விற்பதை நீர் சொன்னதாக மொழிகின்றது வாஸ்தவந்தானு

மோகனரூஜ்.—வாஸ்தவந்தான் ஆனுல் அதிக விலையில்லை நான்குலட்சரூபாய்தான் இப்பொழுதே வேண்டுமானுலும் சாஸ்திரியாரை அழைத்துவருகிறேன் இங்கேயே முடித்துவிடலாம்.

கோ-நாயுடு.—சீக்கிரம் அழைத்துவா.

மோகனரூஜ்.—அப்படியேயென சென்று சாஸ்திரியார் வீட்டிற்கு சென்ற சாஸ்திரியாரே சாஸ்திரியாரே.

சாஸ்திரியார்.—ஆரதுயென வெளியில்வந்து பார்த்ததும் மோகனரூஜ் என்னவிசேஷம்.

மோகனரூஜ்.—தங்களுடைய பங்களாவிற்கு கிருக்கி கொண்டு வாவென்ருயே அதற்காக எவ்வளவோ சிரமப்பட்டு தாங்கள் கூறிய நான்குலட்ச ரூபாய்க்கு முடித்து இருக்கிறேன் எனக்கு தக்க கமிஷன் கொடுத்துவிடவேண்டும்.

சாஸ்திரியார்.—மோகனரூஜ ஆரப்பா அது.

மோகனரூஜ்.—சாஸ்திரியாரே. நம்ம குழந்தை யிருக்கிறதே புஷ்பரஞ்சிதம் அதற்குத்தான் குழந்தைக்கும் நல்ல கிருக்கி தங்களுக்கும் நல்லகிருச்கிதான் தேடிபிடித்தேன் குழந்தை கமிஷன் எவ்வளவோ தங்கள் கமிஷன் எவ்வளவோ பார்க்கலாம் சீக்கிரம் வாருங்கள் என அழைத்தான்.

சாஸ்திரியார்.—மோகனராஜ் பத்துபதினேந்துபேரை அழைத்துவந்து அவர்கள் தலையை மொட்டையடித்து எல்லாம் வைரசெட்டும் பணமும் சம்பாதித்துக் கொண்டீர்கள். இப்பொழுது எந்த மடையனே மாட்டிக்கொண்டான் தங்குவதற்கு இடம் தேடுகிறீர்கள் ஆகட்டும்வாயென இருவரும்வந்து சேர்ந்தார்கள்.

மோகனரூஜ்—நாயுடு அவர்களே சாஸ்திரியார் வந்துவிட்டார் குழந்தை அப்புறம்போயிரு.

சாஸ்திரியாரும் கோதண்டமும் நாயுடும் மோகனரூஜுமும் பேசி முடித்து புஷ்பரஞ்சிதத்துக்கு 4-லட்ச ரூபாய்க்கு விக்கிரயபத்திரம் எழுதி முடித்து சந்தோஷமாக ஒருமாதத்திற்குள் கோதண்டரும் பங்கிட்டுவந்த $3\frac{3}{4}$-கோடி ரூபா

யும் மதுவரக்கனுலும் வேசியர்களின் மாயஜாலத்திலும் தொலைத்துவிட்டு புஷ்பரஞ்சிதம் கோதண்டரும நாயுடுவை வெளியே தள்ளிவிடுகிறுள். சகோதரர்களே விஷயம் சுருக்கமாகிறது ஏடு இடந்தாராதாதலால்,

---

## அத்தியாயம் 9.

## சகோதர வாஞ்சை.

---

கதர் தொழிற்சாலை அபிவிருத்தியடைந்து நாளுக்குநாள் நமது நாடாகிய பாரதசேத்துள்ளவர்கள் கதரணிய முனைந்ததால் கதர் துணிக்கு மதிப்புண்டாகி வியாபாரம் செழிப்புற்றோங்கி ஏழைமக்களுக்கு கஞ்சிவார்த்தும் தொழிலாளிகளே கணக்கைபார்த்து முதலாளிக்குபென்று ஒதிக்கிவைத்த பொருள்கள் 10 கோடி ரூபாய் ஜனர்த்தனம் நாயுடுக்கு சொந்தமாக இருந்தது சகல ஜனங்களும் அவருக்கு வாழ்த்துகள் அனுப்பினர்கள்.

கோதண்டரும்நாயுடு தாசியின் வீட்டைவிட்டு வெளியே துரத்தினதும் கன்றையிழந்த பசுவைப்போல் ஏங்கி என்செய்யலாமென் யோசித்து சகோதரனைக்கண்டு நம் குறையகற்றி கொள்ளலாமென வருகலுற்ருர். அச்சமயத்தில் கோதண்டரும் நாயுடுவை புஷ்பரஞ்சிதம் தள்ளிவிட்டாள் திக்கற்றவன்போல் தெருவிலேங்கி நிற்கின்ருன்யென சிலர் வந்து ஜனர்த்தனம் நாயுடுவுக்கு கூரியவுடன் இதனைக் கேள்விப்பட்டதும் அனலிற்பட்ட புழுவைப்போல் துடிதுடித்து தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்யென்ற பழமொழிபோல் அண்ணு எவ்வளவு மொழிந்தாலும் கேளாது நம்நாட்டை பிடித்து வருத்தும் மதுவரக்கனுக்கு அடிமைபட்டு அதன்றி பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண் என்னும் தாசி வேசிகளை கொள்வது நம்மை அழைத்தேகும் ஏமன்யென அறியாமல் கொடிய வஞ்சகர்களாகிய டாபர்வலையில் சிக்கியதுமல்லாமல் தன்னுயிரைப்

போல் மன்னுயிரை நினையாது நடக்கும் சிநேகிதர்களிடமும் சிக்கி இக்கெதிக்காளாகினேனேயென கண்களில் தாரை தாரையாக நீரைவடித்து அதிவிரைவுடன் தன் காரில் ஏறிச்சென்று அண்ணாவைக்கண்டு இருபாதங்களையும் தழுவி அண்ணா என்னை மன்னிக்கவேண்டும்மென நமஸ்கரித்து தன்காரிலே மனோகரனையும் அழைத்து காரில் ஏற்றிக்கொண்டு கதர்தொழிற்சாலைக்கு சென்றார்கள். தொழிலாளர்கள்யாவரும் இவர்கள் வரவைக்கண்டு மகாத்மா நீடுழிவாழ்க ஜனார்த்தனம் நாயுடு நீடுழிவாழ்க. ஜே ஜே வென கோஷ்டமிட்டனர் அக்கோஷத்னிடையே ஜனார்த்தனம்நாயுடு எழுந்து நின்று சகோதரர்களே தொழிலாளிகளே இந்த தொழிற்சாலைக்கு அருகதையுடையவன் யானல்ல இதோ என் அருகில் அமர்ந்திருப்பவர் என் சகோதரன் தங்களுக்கும் சகோதரர்தான் நமது இந்தியா நாட்டிலே உற்பவித்த யாருயிருந்தாலும்சரி எவ்வித மதஸ்தரா இருந்தாலும்சரி நமது சகோதரர்தான் ஆதலால் எனது அண்ணனை தங்களுக்கெல்லாம் அரிமுகப்படுத்திவைக்கிறேன் என்றதும் கோதண்டரும் நாயுடு எழுந்திருந்து சகோதரர்களே எனக்கிளையோனாகிய ஜனார்த்தனமும் யானும் எங்கள் தகப்பனார் சம்பாதித்தபொருளில் பேர்பாதி பங்கிடுசெய்து இப்பாவியாகிய யான் கொடிய மதுவரக்கனாலும் தாசிவேசிகளாலும் இக்கெதிக்காளாகினேன். எனது சகோதரனைப்போல் இவ்விதமாகிய தொழிலில் ஈடுபட்டால் உங்களைப்போன்ற ஏழைமக்கள் பிழைத்திருப்பார்கள். இன்னம் நம்நாட்டிலே இருக்கும் பிரமுகர்கள் என்னைப்போலழியாமல் கைத்தொழிலை ஆரம்பித்து நடத்தினால் நம்நாட்டில் பஞ்சம் என்ற பெயரையே காணவும் கேழ்க்கவும் இல்லாது ஆதலால் சகோதரர்களே ஒன்றுபட்டுழைக்கவே [illegible] கேட்டுக்கொள்ளுகிறேன் யென முடித்தார். பாரதமாதாவுக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே! வென கூட்டம் கலைந்தது. சுபம் சுபம் சுபம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS No.
104695

ஸ்ரீ சுப்பிரமணிய விலாசம் பிரஸ், காழி 5000 C. ... 360 19-9-46.

# சிநேகிதமா—சிநேஹதமா

அல்லது

## மங்கையற்காதல் என்னும் துப்பறியும் நாவல்

வெளிவரும் எதிர்பாருங்கள்.



**ஆசிரியர் காயார் V. சிங்காரவேல் நாயகர்,**

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—M. கிருஷ்ண நாயர்,
நெ 23, ஆதியப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. மதருஸ்.
மொத்தமாகவும் சில்லரையிலும் கிடைக்கும்